● For private circulation only

Book Post

https://christianhistoricalsociety.in/

# கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்

● செப்டம்பர் 2024 திசை தெரியாமல் திகைக்காதிருக்க திருச்சபை வரலாறு தெரியவேண்டும் ●விலை : ரூ 60 ●இதழ் 52



# கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்

2.2.3(4), North Street, Bungalow Surandai-627859, Tenkasi district



ஆங்கிலிக்கன் திருச்சபையின் முதல் இந்திய அத்தியட்சர், மகோன்னத இந்திய கிறிஸ்தவத் தலைவர், அனைத்துலகக் கிறிஸ்தவ திருச்சபை மேதாவி என்று பெரும் புகழ் படைத்தவரும் மற்றும் இந்திய மிஷனெரி சங்கத்தின் நிறுவனர், கிறிஸ்தவ வாலிபர் சங்க செயலர் என ஒப்புயர்வற்ற மிஷனெரியுமான

# பேராயர் V.S அசரியா

அவர்களின் நூற்றி ஐம்பதாவது பிறப்பு விழாவைக் கொண்டாடும் விதமாக நடத்தப்படுகின்றன.

150th YEARS ANNIVERSARY celebration

## கட்டுரைப் போட்டி

## தலைப்பு: பேராயர் அசரியா என்னும் மாபெரும் தலைவனின் உருவாக்கமும் மெருகேற்றலும்

1st PRIZE ₹ 30,000

2nd PRIZE ₹ 20,000


3rd PRIZE ₹ 10,000

1. கட்டுரைகள் எங்கும் இதுவரை வெளியிடப்படாததாக இருக்க வேண்டும்.
2. கட்டுரைகள் பக்கங்கள் ஒருங்குறியில் (Unicode) அமைய வேண்டும். கணினியில் தமிழில் தட்டச்சு செய்து அனுப்ப வேண்டும். எழுத்தளவு 12 இருக்க வேண்டும்.
3. கட்டுரைகளை **31 அக்டோபர் 2024** க்குள் நிறைவு செய்து .doc அல்லது .pdt கோப்பு வடிவில் christianhistorical@gmail.com அனுப்ப வேண்டும்.
4. கட்டுரைகளில் உள்ள சொற்களின் எண்ணிக்கை A4 தாள் பக்க அளவு, இடம்பெறக்கூடிய கட்டுரைகளுக்கு அளவு 10 பக்கங்கள் வரை இருக்கலாம்.
5. பரிசு பெறும் கட்டுரைகள் மட்டுமல்லாது, பொருத்தமான கட்டுரைகள் அனைத்தையுமே வெளியிடக் கூடிய நூலில் இடம்பெறச் செய்ய உள்ளோம்.
6. தேர்வுக் குழுவின் முடிவே இறுதியானது. சிறந்த கட்டுரைகளுக்கு ஆறுதல் பரிசு உண்டு. போட்டியில் பங்குபெற்ற அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்படும்.
7. பரிசளிப்பு பிறந்த நவம்பர் மாதத்தில் வழங்கப்படும். தேதி பின்னர் அறிவிக்கப்படும்.
8. கட்டுரைகளை மதிப்பீடு செய்வதற்கு அவ்வத்துறைகளில் உரிய கல்வித் தகைமைகளும் அநுபவமும் வாய்ந்த நடுவர்கள் உள்ளனர்.
9. கட்டுரை தொகுப்புடன் ஆசிரியர்களின் தங்கள் வாழ்க்கை குறிப்பினை 500 சொற்களுக்கு மிகாமல் எழுதி தங்கள் முகவரி, தொடர்பு எண், மின்னஞ்சல் புகைப்படத்துடன் கட்டாயம் அனுப்ப வேண்டும்.



**தலைவர்**
ASAR. பாலச்சந்திரன்

**செயலர்**
மன்னா செல்வகுமார்







## பதிப்பாசிரியரிடமிருந்து..

**கிறிஸ்துவுக்குள் அன்பான வரலாற்றுச் சுவடுகள் வாசகர்களே,**

ஆண்டவரும், மீட்பருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தினாலே உங்கள் அனைவருக்கும் கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கத்தின் சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

**இயேசுவையே துதி செய்! நீ மனமே!**
**இயேசுவையே துதி செய்!**

**“கருத்தனே நீரென் உதட்டினைத் திறவும் கனதுதி என்றனாப் புரியும்”** கிறிஸ்தேசு பிரான் மீது பாட்டுரைத்த நெல்லையூரானும், தஞ்சையில் வாழ்ந்த சுவிசேட கவியரசனுமான வேதநாயகம் சாஸ்திரியாராகிய இவரை கிறிஸ்தவ இலக்கிய இசைத் தமிழ் உலகின் முத்தமிழ் கவிஞர் எனச் சொல்லலாம்.

சுவிசேஷ கவியரசன் சங்கை வேதநாயகம் சாஸ்திரியார் 250 ஆவது பிறந்த தின நினைவு விழா கொண்டாட்டங்கள் செப்டம்பர் மாதம் தஞ்சாவூர். சி. எஸ். ஐ. தூய பேதுரு ஆலயத்தில் நடைபெற்றது. தமிழில் 130 படைப்புகளுக்கும் அதிகமாக எழுதி; 200 ஆண்டுகளுக்கும் மேலாக; உலகம் எங்கும் தமிழர்களால் பாடப்படும் கீர்த்தனைகளை இயற்றிய நற்செய்தி கவியரசனுக்கு எடுக்கப்பட்ட இந்த வரலாற்று நிகழ்வை உங்களுக்கு தொகுத்து முகநூலிலும், யூடியூப்பிலும் அளிப்பதில் நாங்கள் பெருமகிழ்ச்சி அடைகிறோம். இம்மாத இதழிலும் வேதநாயகம் சாஸ்திரியார் குறித்த கட்டுரைகளை தொகுத்து கொண்டு வந்து இருக்கின்றோம்.

இவ்விதழளை வாசிக்கும் நேயர்கள், மிஷனெரிகள் மற்றும் ஊழியர்களின் தியாகங்களை மற்றவர்களோடு கூட பகிர்ந்துக் கொண்டு, மிஷனெரிகள் ஏற்றிய அந்த தியாக தீபத்தை அடுத்த தலைமுறையினரின் கரங்களில் கொடுப்பது நம் கட்டாய பணியாகும். ஒவ்வொரு மாதமும் இவ்விதழை வெளியிடுவதற்கு மிகுந்த பொருட்செலவுகள் உண்டு, புதுப்பிக்காதவர்கள் மாத சந்தாவை புதுப்பித்துக் கொள்ளும்படி அன்புடன் நினைவுபடுத்துகிறேன். முடியுமானால் காணிக்கையாகவோ அல்லது நன்கொடையாகவோ கொடுத்து தாங்க அன்போடு கூட கேட்டுக் கொள்ளுகின்றேன்.

கிறிஸ்தவ வரலாற்றுச் சங்க நூலக மற்றும் அருங்காட்சியகம் கட்டுமானப் பணிகள் விரைந்து நடைபெற்று வருகின்றன. தொடர்ந்து தாங்கவும் ஜெபிக்கவும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பராபரனின் பணியில்

*Manna Selvakmuar*

**9176780001**

**சுஜித் ரெக்ஸ்**
வடிவமைப்பு

**மன்னா செல்வகுமார்**
ஆசிரியர்

இது ஒரு வரலாற்றுச் சங்க உறுப்பினர்களுக்கான பதிப்பு, சந்தா விபரங்கள் இதழின் உள்ளே,

9176780001 www.christianhistoricalsociety.in christianhistorical@gmail.com

புரட்சிக் கவி சுவிசேட கவிராயர் சங்கை

# வேதநாயகம் சாஸ்திரியார்




ஜே.பர்னபாஸ்

சேலம் வரலாற்றுச் சங்கம்




'வானபரியந்தம் மட்டும் எனின் சத்தம் வர - ஆனமட்டும் கூப்பிட நான் ஆசை பராபரனே!' என்று பராபரனை ஜெய கோஷ்டம் முழக்கி பாடித் துதித்தும், அந்த ஒரு பராபரனை அன்றி வேறு பாட்டறியா பாவலன் தஞ்சை சுவிசேடக் கவிராயர் சங்கை வேதநாயகம் சாஸ்திரியார் (1774-1864) தன்னைப் பற்றி சொல்லும் போது **'பராபரனல்லாத பாட்டறியான் எம் பராபரனை யன்றிப் பாட்டுரையான் - பராபரன் தன்னையே கொண்டாடி நிதம் பாட்டுப் பாடுவான் ஞானப் பெண்ணே!'** என்று தனது சாஸ்திரக் கும்மியில் (பா. 433) குறிப்பிடுகிறார். கிறிஸ்தேசு பிரான் மீது பாட்டுரைத்த நெல்லையூரானும், தஞ்சையில் வாழ்ந்த சுவிசேட கவியரசனுமான வேதநாயகம் சாஸ்திரியாராகிய இவரை கிறிஸ்தவ இலக்கிய இசைத் தமிழ் உலகின் முத்தமிழ் கவிஞர் எனச் சொல்லலாம்.

தமிழ்க் கிறிஸ்தவ இசைப் பாடல்கள் பாடுவதில் அவர் ஒரு பாகவதராகத் திகழ்ந்தார். இவர் பெற்ற பட்டங்களில் **'சாஸ்திரியார்'** என்ற பட்டம் இவரின் பேருக்குப்பின் ஒட்டிக் கொண்டது. பராபரன் பாட்டுரைத்தாலும் அவர் ஒரு புரட்சிக் கவிஞராகவே திகழ்ந்திருக்கிறார். சீர்திருத்தக் கருத்துக்களை புரட்சிகரமாக வெளியிடுவதில் அவர் ஒரு சீர்திருத்தச் செம்மல். முற்போக்குச் சிந்தனைகள், மூடநம்பிக்கைகளை ஒழிப்பதில் தீவிரம், அவரது படைப்புகளில் தெரிகிறது. 90 வயதுவரை வாழ்ந்து ஏறத்தாழ 141 க்கும் மேற்பட்ட நூல்களை இயற்றிய இவர், தமிழ் கிறிஸ்தவ இலக்கிய இசைத் தமிழ் உலகில் ஒரு துருவ நட்சத்திரம். இவரது பங்கும் பணிகளும் என்றென்றும் புகழ்ச்சிக் குரியதே. இயேசுவையே பாடிக் கொண்டிருத்தல் இவரது சங்கல்பம். இதை உறுதி செய்யும் இவரது **'இயேசுவையே துதி செய்! - நீ மனமே! - இயேசுவையே துதி செய்!'** என்ற கீர்த்தனை பிரசித்தம்.

### வேதநாயகம் சாஸ்திரியாரின் ஆளுமை:

சாஸ்திரியார் ஒரு சுந்தர ரூபன். அவர் அழகிய தோற்றப் பொலிவு கொண்டவர். பரந்த நெற்றி, விசாலமான முகத் தோற்றம் கொண்டவர். விவிலியத்தில் சொல்லப்பட்டும் பிரதான ஆசாரியன் போல தோற்றம் உடையவராகக் காணப்படுவார். சாஸ்திரியார் ஆடம்பரமாக உடுத்துவதில் சமர்த்தர். தன்னை சோடிக்கும் உடைக்கும், மிடுக்கான நடைக்கும் யாரும் வணங்கத்தக்க, மதிப்பு கொண்டவர். பண்டிகை நாட்களிலும், மற்ற முக்கியமமான நாட்களிலும் சிறப்பான ஆடைகளை அணிந்து கொண்டு ஆலயத்திற்கு போவார். இவர் அருளுரையாற்றும் போது வெள்ளை நிலையங்கி தரித்து, தலையிலே சிகப்பு சௌத்னா குல்லா போட்டு, இடுப்பிலே கச்சைக் கட்டிக் கொண்டு இருப்பார்.

1849ஆம் ஆண்டு சாஸ்திரியாரின் 77 ஆவது வயதில் சங்கை ஹென்றி பவர் ஐயரும் (Rev. Henry Bower), சங்கை கெஸ்ட் ஐயரும் (Rev. Guest) இணைந்து தங்கள் செலவில் ஒரு ஓவியரை அமர்த்தி சாஸ்திரியாரின் உருவத்தை படம் வரைந்து பெற்றனர். அந்த உருவமே இன்றுவரை போற்றப்படும் அவர் உருவமாக இன்றும் நிலைத்திருக்கிறது.

### அரசவைக் கவிஞர் :

தஞ்சை மன்னன் சரபோஜியும், வேதநாயகம் சாஸ்திரியாரும் பால்ய நண்பர்கள். 1785 ஆம் ஆண்டு வாக்கில் சங்கை சுவார்ட்ஸ் ஐயரின் பாதுகாப்பில் மாணவர்களாக படித்துவந்தனர். அப்பொழுது சாஸ்திரியாருக்கு 12 வயது, சரபோஜிக்கு 10 வயது. சரபோஜி சாஸ்திரியாரை 'அண்ணா' என்று அப்பொழுது அழைத்து வந்தார். பின்னர் சாஸ்திரியார் கவியரசராகவும், சரபோஜி புவியரசராகவும் மாறினர். தஞ்சை சரபோஜி மன்னர் வேதநாயகம் சாஸ்திரியாரை தனது அரசவைக் கவிஞர்களுள் ஒருவராக அமர்த்திக் கொண்டு, அவருக்கு மாதம் 10 வராகன் சம்பளம் கொடுத்து ஆதரித்தார். சரபோஜி மன்னர் சாஸ்திரியாரை 'அண்ணா கவி' என்று அன்புடன் அழைத்தார். சரபோஜி மன்னர் மாதம் இருமுறை தங்கள் வேதம் சொல்லப்படாத நாட்களில் சாஸ்திரியாரை அழைத்து, அவரது பாடல்களைக் கேட்டு உரையாடுவது அவரது வழக்கமாக இருந்தது. சாஸ்திரியார் சரபோஜி மன்னருடைய அரச வம்ச வரலாற்றை 'போன்ஸ்லே வம்ச சரித்திரம்' என்ற ஒரு நூலாக பாடி பரிசுபெற்றார். சரபோஜி மன்னரது அவையில் சாஸ்திரியார் மன்னருக்கு இணையாக அரசவையில் அமரும் வாய்ப்பைப் பெற்றார்.

**'நோவாவின் கப்பல் பாட்டு'** என்ற நூலை சாஸ்திரியார் தஞ்சை சரபோஜி மன்னரின் அரச சபையில் அரங்கேற்றி அதற்காக மன்னரிடம் 100 வராகன் பரிசு பெற்றார். சரபோஜியின் மகன் சிவாஜி சிறுவனாக இருந்தபோது அவன் தமிழ் கற்றுக் கொள்ள வேண்டி **'தமிழ்ப் பாட நூல்'** ஒன்றை சாஸ்திரியார் தயாரித்துக் கொடுத்தார்.

சரபோஜி மன்னர் அரசசபையில் **'பெத்லகேம் குறவஞ்சி'** என்ற தனது மணிமுடிப் படைப்பை சாஸ்திரியார் அரங்கேற்றி சாதனை செய்தது சிறப்பானது.

*'அற்புத சீயோன் மலைதான் பொற்பு மலை யம்மே!*
*ஆட்டுக்குட்டி மனைவி குடியான மலை யம்மே!*
*கற்புள கன்னியாஸ்திரிகள் வாழும் மலை யம்மே!*
*காரணர்க்குக் கலியாணம் ஆகும் மலை யம்மே!*
*பற்பல பாடான மலை கொல்கதாத்தான் அம்மே!*
*பரன்சுதனார் பாடுபட்டு மரித்த மலை யம்மே!*
*முற்பவத்தை நீக்க மனுவான மலை யம்மே!*
*முத்தி பெத்தலேகம் எங்கள் முதன்மை மலை யம்மே!'*

நோவாவின் கப்பல் பாட்டு, பெத்லகேம் குறவஞ்சி, போன்ற கவிபாடல் நூல்கள் சரபோஜி இராஜ சபையில் அரங்கேற்றியதால் மன்னர் இதனால் மகிழ்ந்து, வேதநாயகம் சாஸ்திரியாரின் கவிதைகளின் பொருட்சுவை, சொற்சுவை, அந்தி, சந்தி, எதுகை, மோனை, தாளம், இராகம் எல்லாம் சிறப்பாக இருப்பதாக பாராட்டி, தான் புவிராஜன், நீர் கவிராஜன் என்று சாஸ்திரியாரைப் புகழ்ந்து பேசினார் என்றும் அறிகிறோம்.

**ஏசுவையே துதி செய் நீ மனமே! - ஏசுவையே துதி செய்!:**

பின்னும் ஒரு நாளிலே சரபோஜி மன்னர் சாஸ்திரியாரிடம் தனது தெய்வம் பிரகதீஸ்வரர் மீது ஒரு குறவஞ்சி பாடச் சொன்னார்.

**அதற்கு சாஸ்திரியார்:** மிகுந்த நடுக்கத்தோடும், அச்சத்தோடும், நான் அப்படி பாராபரனைத் தவிர வேறு தெய்வத்தைப் பாடமுடியாது என்று சொன்னார்.

**அதற்கு ராஜா :** நான் உனக்கு சம்பளம் கொடுப்பதால் நான் சொல்லும் வேலையை நீர் செய்ய வேண்டும் என்றார். சாஸ்திரியாரோ தனக்கு 56 வயதாகிறது என்றும், தன்னை இதுநாள் வரையிலும் நடத்திவந்த பராபரனை மறுதலித்து விரோதம் செய்து, அவருக்கு சத்துருவாக போகமாட்டேன் என்றார். இது எப்படி விரோதம் ஆகும் என்று சரபோஜி கேட்டார்.

**அதற்கு சாஸ்திரியார்** : நான் 12 வயது சிறுவனாக இருந்த போது திருநெல்வேலியிலிருந்து என்னை அழைத்து வந்து அன்னவஸ்திரங்கொடுத்து ஆதரித்து, எனக்கு போதித்த உபதேசத்திற்கு விரோதமான காரியத்தை நான் செய்யமாட்டேன் என்றார்.

**அதற்கு சரபோஜி மன்னர் :** நீர் குறவஞ்சி பாடாதே போனால் போகட்டும்; ஒரு காப்பு மாத்திரம் பிள்ளையார் மீது பாடினால் போதும் என்று சொன்னார். ஆனால் அதற்கு உடன்படாத **சாஸ்திரியார்:** ஒரு சின்ன பாடல் பாடினாலும் நான் எனது ஆண்டவருக்கு விரோதமாக போய்விடுவேன் என்றார்.

**அப்போது சரபோஜி மன்னர் :** இயேசுநாதர் பேரிலே நாங்கள் பாடல்கள் பாடுகிறோம்; நீர் சொல்லும்படி எல்லாம் பாடல்கள் பாடுகிறோம். அதன்பிறகாகிலும் நீர் பிள்ளையார் பேரில் ஒரு காப்பு மட்டும் பாடுங்கள் போதும் என்றார். அதற்கு சாஸ்திரியார் நீங்கள் பாடினாலும் நான் ஆண்டவரைத் தவிர வேறு யாரையும் பாடமாட்டேன் என்றார். அப்பொழுது மன்னருக்கு கோபமும், ஆயாசமும் உண்டாகி அவர் **அரசசபை சங்கத்தாரை நோக்கி :** என்னாங்க இது இவருடைய சாமி பேரிலே இவர் பாடிய பாடல்களை எல்லாம் நாங்கள் கேட்க வேண்டுமாம். நாங்கள் அவரது சாமிமீது பாடல்கள் பாடினாலும், அவர் நமது சுவாமியின் மீது பாடல் பாடமாட்டாராம். இதெப்படி இருக்கிறது என்றார்.

**அதற்கு அரசவை சங்கத்தார் சாஸ்திரியாரைப் பார்த்து :** நீங்கள் இராஜாவின் வார்த்தையைத் தட்டாமல் ஒரு காப்பு மாத்திரம் பாடுங்கள் என்றார்கள்.

**அதற்கு சாஸ்திரியார் :** எத்தனையோ யானை, குதிரைகள், அரண்மனையில் பராமரிக்கப்படுகிறது அவைகளில் ஒன்றைப்போல என்னைப் பாவித்து நடத்த சித்தமானால் தங்கள் மனது, அல்ல வென்றால் என்னை அனுப்பிவிட்டாலும் உங்கள் சித்தம். என்றவர் தொடர்ந்து, இனி என்னை எல்லாரும் பகைத்து உங்களுக்கு கஷ்டத்தை உண்டாக்குவார்கள்; பிழைக்கலாம் என்று வந்த இடத்தில் இப்படி சோதனை நேரிட்டதே என்று பிரலாபிக்கத் தொடங்கினார். அதுவரை பொறுமையுடன் கேட்ட மன்னர் சற்று கோபமாக 'ஓய் வேதநாயகம் பிள்ளை, நீ ஒருத்தருக்கும் பயப்பட வேண்டாம். உம்முடைய இயேசு நாதரையே பாடிக் கொண்டு சுகமே இரும்' என்று சொல்லி சாஸ்திரியாரை அனுப்பிவிட்டார் என்று சொல்லப்படுகிறது. இந்த தருக்க வாதங்கள் ஒரு ஜாமத்திற்கும் மேலாய் நடந்ததாகவும் அறிகிறோம். கவலை தோய்ந்த முகத்துடன் வீட்டிற்கு வந்த சாஸ்திரியார் தனது மனைவியிடம் இந்த நிகழ்ச்சிகளை எல்லாம் சொல்லி, பிழைக்கச் சென்ற இடத்தில் தனது விசுவாசத்திற்கு நேர்ந்த சோதனையைப் பற்றிப் பிரலாபிக்கையில் சாஸ்திரியாரின் மனதில் உதித்த பாடல்தான் **'இயேசுவையே துதிசெய் - நீ மனமே - இயேசுவையே துதிசெய்!'** என்ற கிறிஸ்து சபை கீர்த்தனை.

சாஸ்திரியாருக்கும் சரபோஜி மன்னருக்கும் இந்த நிகழ்விலிருந்தே அவர்கள் நட்பில் விரிசல் விரிவடைந்து வந்தது. இருந்தாலும் மன்னருக்கு சாஸ்திரியாரின் மேல் இருந்த கனமும் நேசமும் குறையவில்லை.

1832 ஆம் ஆண்டு சரபோஜி மன்னர் மரித்துப்போனார். அரசன் சரபோஜி தான் மரிக்கும் முன்பு தனது நண்பன் வேதநாயகம் சாஸ்திரியார் தன்பேரில் புலம்பல் பாடிய பின்னரே எனது உடல் அரண்மனையை விட்டு வெளியேற வேண்டும் என கேட்டுக் கொண்டார். அதன்படி சாஸ்திரியார் துக்க உடை அணிந்து மன்னர் சடலம் முன்பு மனம் உருகிப் பாடிய புலம்பலைக் கேட்டு அங்கு கூடிவந்த அனைவரும் அழுதார்கள் என சொல்லப்படுகிறது.

'சத்ரபதியே, உத்தம துரையே!

தஞ்சை மாநகரத்தை விட்டே என்னையும் மறந்து, என்

பாடலும் கேளாது

எங்கனம் சென்றனை ஐயா

என்று நான் உந்தன் திருமுகம் காண்பேன்!'

சாஸ்திரியார் சரபோஜி அரசசபையில் மதிப்பிற்குரியவராகவே மன்னருக்கு இணையாகவே திகழ்ந்தார். மன்னரை பார்க்கவரும் புலவர்கள் யாரும் தாழ விழுந்து பணிந்து கொண்டனர். ஆனால் சாஸ்திரியார் அப்படி பணிந்து கொள்வதைத் தவிர்த்து வந்தார். இதனை மன்னரிடம் சொல்லி மன்னரின் மனதை சாஸ்திரியாருக்கு விரோதமாகத் திருப்பி விட புலவர் சிலர் முயற்சித்த போது, சரபோஜி மன்னர் அந்தப் புலவர்களை நோக்கி: அண்ணா கவி என்னை ஆசீர்வதிப்பவராதலால் அவர் என்னை தாழ விழுந்து வணங்க அவசியமில்லை என்று சொல்லி புலவர்களின் வாயை அடைத்துப் போட்டார்.

வேதநாயகம் சாஸ்திரியார் சரபோஜி மன்னரின் இராஜ சபைக்கு பல்லக்கில் அமர்ந்துதான் செல்வாராம். பல்லக்கில் சாஸ்திரியார் அரண்மனைக்கு போகும் காட்சி மகிமையானது; பல்லக்கு தூக்கிகள் பல்லக்கை சுமந்துவர, முன்னால் செல்லும் அதிகாரி சாலையில் போவோரையும், வருவோரையும் ஒதுங்கச் சொல்லிக் கொண்டு போவதையும், அரண்மனைக் காவலர்கள் முன்னும் பின்னுமாக வருவதெல்லாம் கண்கொள்ளாக் காட்சியாக இருந்திருக்கும். இதை ஒரு ஓவியமாகத் தீட்டி பார்க்க எனக்கு ஆசை. தஞ்சை மாநகரிலே மன்னர் ஆட்சியில் ஒரு கிறிஸ்தவத் தமிழ் கவிஞன் பெற்ற மகத்தான மரியாதை!

**வேதநாயகம் சாஸ்திரியாரும் திருவையாறு தியாகராஜ பாகவதரும்:**

தஞ்சாவூருக்கு வடக்கே ஆறு மைலுக்கப்பால் திருவையாற்றில் வசித்த சங்கீத வித்வான் தியாகராஜ பாகவதரும், சாஸ்திரியாரும் சமகாலத்தவர்கள். இருவருமே தங்கள் தெய்வங்களைத் தவிர வேறு தெய்வங்களையோ, மனிதர்களையோ போற்றிப் பாட மாட்டார்கள். ஒருமுறை சரபோஜி மன்னர் தனது பேரில் புகழ் விளங்கும்படி கவிபாட வேண்டுமென்று தியாகராஜ பாகவதரிடம் ஒரு தூதனை அனுப்பிகேட்டுக்கொண்டார். பத்துவேலிநிலமும், பொற்காசுகளும் அரச உபகாரமாக தருவதாக எடுத்துச் சொல்லியும் தியாகராஜ பாகவதர் ஸ்ரீ ராமனைத் தவிர வேறுயாரையும் பாட மாட்டேன் என்று மறுத்துவிட்டாராம்.

இவரைப் போலவே வேதநாயகம் சாஸ்திரியும் பிரகதீஸ்வரரையோ, பிள்ளையாரையோ பாடாமல், நரஸ்துதி பாடாமல், தனது ஆண்டவரை மறுதலிக்காமல் நின்றிருக்கிறார். மேலும் மன்னர் கொடுத்த நிலக்கொடையையும் வேண்டாம் என்று மறுத்திருக்கிறார்.

**புரட்சிக் கவி சீர்திருத்த செம்மல் :**

அக்கால சமுதாயத்தில் காணப்பட்ட சாதி வேற்றுமைகள், துவேஷங்கள், கொடுமைகள், மூடப்பழக்க வழக்கங்ள், நாள் பார்ப்பது, நட்சத்திரம் பார்ப்பது, சகுணம் பார்ப்பது, ஆகியவற்றை எல்லாம் வன்மையாக எதிர்த்து தனது நூல்களில் பாடி மக்களை சீர்படுத்தும் முயற்சிகளில் சொல்லாலும், செயலாலும் ஈடுபட்டார்.

குறிப்பாக சாதி வேறுபாட்டை வேரறுக்கும் தீவிர முயற்சிகளை தனது பாடல்கள் மூலம் தீமூட்டினார். அவரது பாடல் வரிகள் புரட்சிகரமானவைகள் ஞான தச்சன் நாடகத்தில் வரும் பாடல் வரிகள் :

'சாதியேது காண்! - அதில் ஒரு சைவமேது காண்!

குலங்கலேது காண்! - அதினுட நலங்கலேது தான்! '

என்று பாடி சாதீயத்தை, குலங் கோத்திர, சாத்திர, சண்டைகளை தூரந் துரத்தினார்.

'எல்லா நாளையும் நல்ல நாளென எமைப் படைத்தவன் செய்திருக்கப்

பொல்லா நாளென்றும் , நல்ல நாளென்றும்,

புகல்வ தாரடி ஞானப் பெண்ணே! '

சீர்திருத்தச் செம்மல் புரட்சிக் கவிராயர் வேதநாயகம் சாஸ்திரியார் தனது 90ஆவது வயதில் 1864 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24 ஆம் நாள் இந்த மாயையான உலக வாழ்வை நீத்து இறைபதம் சேர்ந்தார். அவரது உடல் அடுத்த நாள் (25-01-1864) தஞ்சாவூர் புனித பீட்டர்ஸ் தேவாலயத்தின் பின்னாக இருக்கிற மிஷன் கல்லறைத் தோட்டத்தில் தஞ்சை திருச்சபையின் சகல மரியாதைகளுடன் உயிர்த்தெழுதலின் நல்நம்பிக்கையுடன் நல்லடக்கம் செய்யப்பட்டது.

'அவன் மரித்தும் இன்னும் பேசுகிறான்' (எபிரேயர் 11:4) என்ற வசனத்திற்கு ஏற்ப தஞ்சை சுவிசேட கவிராயர் தன் பாடல்கள் மூலம் இன்றும் நம்முடன் பேசிக்கொண்டிருக்கிறார்.

கடந்த 1999 ஆம் ஆண்டில் நான் ஒரு குடும்ப நிகழ்வு நிமித்தமாக தஞ்சாவூர் சென்றிருந்தபோது புனித பீட்டர் தேவாலயத்தின் பின்னாக இருந்த கல்லறைத் தோட்டத்தில் உள்ள சங்கை வேதநாயகம் சாஸ்திரியார் கல்லறையில் அஞ்சலி செலுத்தினது இன்றும் என் நினைவில் நிற்கிறது. அப்பொழுது எடுத்த ஒளிப்படம் இது.

'வெல்லையில் மேவிய வேத சிரேஷ்டர்!

நெல்லையின் வேதநாயகன் பாட்டன்!'

இயேசுவையே துதி செய்!'

நீ மனமே! இயேசுவையே துதி செய்!'





# கோவிந்தப்பேரி சரித்திரம்

## 1824-2024



ஜா.ஜான் ஞானராஜ்
திருநெல்வேலி

தென்தமிழ்நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் திருநெல்வேலியில் இருந்து தென்மேற்கே சுமார் 25 கிலோ மீட்டர் தொலைவில் மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் உள்ள இயற்கை எழில் மிகுந்த கிராமம் **கோவிந்தப்பேரி.** சேரன்மகாதேவியில் இருந்து தெற்கே சுமார் 9 கி. மீ. தொலைவில் களக்காடு செல்லும் நெடுஞ்சாலையில் கோவிந்தப்பேரி உள்ளது.

### கோவிந்தப்பேரி ஊரின் உருவாக்கம்

கோவிந்தப்பேரி, நெடுவிளை, கரிசல் மற்றும் ஓடைக்கரை சார்ந்த இடையன்குளம் வட்டாரத்தில் திருநெல்வேலி மாவட்ட CMS மிஷனின் தலைமை மிஷனெரி கனம். ரேனியஸ் ஐயரவர்கள் மூலம் நற்செய்திப்பணி 1824 முதல் தொடங்கியது. சுமார் 250 முதல் 300 ஆண்டுகளுக்கு முன்பாகவே இக்கிராமம் உருவாகி இருக்க வேண்டும். 1800 இல் இக்கிராமத்தில் பிறந்து ரேனியஸ் ஐயரவர்களும், உபதேசிமார்களும் செய்த நற்செய்திப் பணியால் 01.03.1824 இல் கிறிஸ்தவத்தை ஏற்று ஞானஸ்நான ஆயத்தக்காரராகி 16.12.1827 அன்று ரேனியஸ் ஐயரவர்களால் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்ட கோவிந்தப்பேரி சபைத் தலைவர் திரு. பே. சு. முத்துப்பாண்டியன், திரு. பே. சு. ஞானப்பிரகாசம் ஆகியோரின் பெற்றோர் திரு. பேதுரு சுப்பிரமணிய நாடார் - திருமதி. பேரின்பம் பேச்சி ஆகியோர் தம் பெற்றோர் மற்றும் உடன்பிறந்தோர் குடும்பத்தோடு வாழ்ந்த காலத்திலேயே கோவிந்தப்பேரி கிராமம் உருவாகி உள்ளது. ஆதலால் இக்கிராமம் 1750 க்கு முன்னரே உருவாகி இருக்க வேண்டும்.

### முன்னோரின் வருகை

வேணாட்டில் இருந்து 18 ஆம் நூற்றாண்டில் டிலனாயைத் தளபதியாக கொண்ட டச்சு படைக்கும், அனந்த பத்மநாபன் நாடாரை தளபதியாகக் கொண்ட வேணாடு அரசு படைக்கும் இடையே நடந்த பெரும் போரான குளச்சல் போர் நடைபெற்ற காலத்தில் வேணாடு அரச வழி மரபினரான ஐந்து சகோதரர்கள் அங்கிருந்து வெளியேறினர். அதில் ஒருவர் குடியேறிய இடம் உகந்தநாச்சியார்புரம் மற்றொருவர் குடியேறிய இடம் உடன்குடி. பிற மூவர் குடியேறிய இடம் குட்டம். குட்டத்தில் குடியேறிய சேர

அரச வழி மரபினராகிய மூவரில் ஒருவரின் ஆண் வழியில் வந்த பெண்ணை சேர பாண்டிய அரச வழிமரபினரான கோவிந்தப்பேரி சுப்பிரமணிய நாடார் என்ற பேதுரு மற்றும் சு. முத்துப்பாண்டியனின் முன்னோர் திருமணம் செய்து குறுநில அரசரைப் போன்று கோவிந்தப்பேரி மற்றும் அதன் சுற்றுக் கிராமங்களில் வரி வசூல் செய்தல் போன்ற பல காரியங்களை செய்து ஆளுகை செய்து வந்தார்கள். கோவிந்தப்பேரி கிராமத்தில் பெருமாள் கோயிலைக் கட்டி பொது கோயிலாக அதை அனைவரும் வழிபட்டு வந்தனர்.

## தொடக்க கால கோவிந்தப்பேரி குடும்பங்கள்

கோவிந்தப்பேரி ஊரை உருவாக்கிய குடும்பத்தின் மூத்தவரான பெரியவர் திரு. சுப்பிரமணிய நாடார் என்ற பேதுரு - பேரின்பம் பேச்சி தம்பதியரின் மூத்த மகன் சு. முத்துப்பாண்டியனின் குடும்பம் மட்டும் அல்லாது அவரது தம்பி சு. ஞானப்பிரகாசம் லட்சுமணன் குடும்பத்தினர் நெருங்கிய உறவினர்கள் ஆன திருப்பரமம்மை குடும்பத்தினர். சாந்தாயி மாசாணம் குடும்பத்தினர் என அனைவரும் பெருங்குடும்பமாக கோவிந்தப்பேரி கிராமத்தில் வசித்து வந்துள்ளனர். கோவிந்தப்பேரி சபைத் தலைவராக இருந்த முத்துப்பாண்டியன் சீதாலெட்சுமி அவர்களைத் திருமணம் செய்வதற்கு முன்னர் கோவிந்தப்பேரி கிராமம் முழு கிறிஸ்தவ கிராமமாக மாறி இருந்ததைக் குறித்தும் கோயில் ஜெப ஆலயமாக மாற்றப்பட்டிருந்தது குறித்தும் ரேனியஸ் ஐயவர்களின் குறிப்புகள் மூலம் அறிய முடிகிறது.

## கோவிந்தப்பேரி பொருளாதார நிலை

கோவிந்தப்பேரியில் வசித்த ஒவ்வொரு குடும்பத்தாருக்கும் ஏராளமான மாடுகள், ஆடுகள் இருந்துள்ளது. கோவிந்தப்பேரி கிராமத்தின் மேல்புறம் உள்ள குளத்துப் பாசனம் மூலமாக நல்ல விளைச்சலைத் தரும் வயல் நிலங்கள் அனைத்து குடும்பத்தாருக்கும் இருந்தது.

## அறிமுகம்

கோவிந்தப்பேரி என்ற இக்கிராமத்தின் பெயரை ரேனியஸ் தமது மிஷன் பதிவுகளில் பலமுறை குறிப்பிட்டுள்ளார். ரேனியஸ் ஐயரவர்களுக்குப் பின் CMS தலைமை மிஷனெரி ஆகப் பொறுப்பேற்று பணி செய்த பெற்றிட் மற்றும் சார்ஜென்ட் ஆகிய மிஷனெரிகளும் டோனாவூர் தலைமை மிஷனெரி ஆக இருந்த டென்ற் அவர்களும் தமது ஊழிய மிஷன் ரிப்போர்ட்களில் கோவிந்தப்பேரி கிராமத்தைக் குறிப்பிட்டுள்ளனர். கரிசல்பட்டி CMS சுத்தாங்க சுவிசேஷ திருச்சபைகளின் தலைமை விசாரணை உபதேசியார் சங்கை. சுவி. தாவீது ஐயா அவர்களது வாழ்க்கை வரலாற்று நூலில் சேரன்மகாதேவியில் இருந்து களக்காட்டுக்கு செல்லும் பாதையில் சேரன்மகாதேவி அடுத்து பேருந்து நிறுத்தப்படுகிற பேருந்து நிறுத்தம் கோவிந்தப்பேரியில் தான் இருந்துள்ளது. சங்கை. சுவி. தாவீது ஐயா அவர்கள் எப்போதும் பேருந்தில் ஏறுவதும் பேருந்தில் இருந்து இறங்குவதும் கோவிந்தபேரியின் பேருந்து நிறுத்தத்தில் தான் என்பதைப் பதிவு செய்துள்ளார்கள்.

## கோவிந்தப்பேரியில் கிறிஸ்தவம் ரேனியஸின் நற்செய்திப் பணி

ரேனியஸ் ஐயரவர்களும், தலைமை விசாரணை உபதேசியார் தாவீது மற்றும் மாசிலாமணி, ஆசீர்வாதம், ஆகிய உபதேசிமார்களும் பாளையங்கோட்டையில் ரேனியஸால் நடத்தப்பட்டு வந்த செமினரியில் படித்து வந்த மாணவர்களும் இணைந்து தென் மேற்கு நெல்லை மாவட்டக் கிராமங்களில் இடைவிடாது சுற்றியலைந்து செய்த நற்செய்திப் பணியால் கோவிந்தப்பேரி கிராமத்தார் 1824 தொடக்கத்தில் கிறிஸ்தவத்தை முழு கிராமமாக ஏற்றுள்ளனர். தென்மேற்கு நெல்லையில் முதன்முதலாக கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்ட கிராமம் கோவிந்தப்பேரியே.

## கோவிந்தப்பேரியில் சபை உருவான நாள் 01.03.1824

வழக்கமாக தமது மிஷன் குறிப்புகளில் கோவிந்தப்பேரி சபை குறித்து மகிழ்ச்சியுடன் எழுதி வந்த ரேனியஸ் ஐயரவர்கள் 01.03.1824 அன்று கோவிந்தப்பேரிக்கு தாம் முதன் முதலாக பல்லக்கு மூலம் வருகை தந்த போது கோவிந்தப்பேரி சபை இருந்த நிலை குறித்து மகிழ்ச்சியான ஒரு காரியத்தைப் பகிர்ந்து கொள்கிறார்கள்.

**"01.03.1824 பிற்பகலில் என்னுடைய பல்லக்கில் பயணமாகி கோவிந்தப்பேரி வந்தடைந்தேன். கோவிந்தப்பேரியில் பிறமதக் கோயில் ஜெப ஆலயமாக மாற்றப்பட்டிருந்தது. விக்கிரகத்தை நேற்று தான் அகற்றி வெளி வாசலில் வைத்திருந்தனர். இது ஒரு சிறு கோயில் தான் ஓலை வேய்ந்த கூரையை உடையது, ஆனால் இங்கு ஒரு பெரிய அரண்மனையில் இருப்பது போன்ற மகிழ்ச்சியுடன் நான் இருக்கிறேன், ஏனெனில் கடவுள் இங்கே இருக்கிறார், அவர் தம் மக்களுடன் வாழப் போகிறார்."** கோவிந்த பேரி கிராமத்தார் முழுமையாக கிறிஸ்தவத்தை ஏற்றிருந்ததை முன்வைத்து இவ்வாறு ரேனியஸ் ஐயரவர்கள் புகழ்ந்து எழுதியுள்ளார்கள்.

ரேனியஸ் ஐயரவர்கள் கோவிந்தப்பேரிக்கு வருகை தந்து கோவிந்தப்பேரியில் பிறமத கோயிலாக இருந்து 01.03.1824 அன்று ஜெப ஆலயமாக மாற்றப்பட்டிருந்த இடத்தை பிரதிஷ்டை செய்து ஆசிர்வதித்து அந்த இடத்தில் ஜெபம் நடத்தி பிரசங்கம் செய்தார். அந்த நாளான 01. 03. 1824 ஆம் நாளே கோவிந்தப்பேரி சபை உருவான நாளாக ரேனியஸ் ஐயரவர்களால் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கோவிந்தப்பேரியின் சுற்றுக் கிராமங்களில் ரேனியஸ் ஐயரவர்களின் நற்செய்திப் பணி

1824 கடைசியில் நெடுவிளையில் சபை உருவானது. 1825 தொடக்கத்தில் தென் மேற்கு நெல்லை மாவட்டத்தில் கரிசல், ஒடைக்கரை, செவல், துவரைக்குளம், துலுக்கப்பட்டி, செங்குளம் (மலைச்செங்குளம்) ஆகிய கிராமங்கள் கிறிஸ்தவத்தை ஏற்றன. மேற்கண்ட இக்கிராமங்களில் சிறு சிறு கூட்டமாக மக்கள் கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்டார்கள் என குறிப்பில் ரேனியஸ் ஐயரவர்களால் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 1825 பிப்ரவரியில் கனம். ரேனியஸ் ஐயரவர்களின் கோவிந்தப்பேரி வருகை

1825 பிப்ரவரியில் கனம். ரேனியஸ் ஐயரவர்கள்

கோவிந்தப்பேரி, கரிசல், ஓடைக்கரை, சபை மக்களை சந்தித்துள்ளார்கள். ரேனியஸ் ஐயரவர்களின் குறிப்பின் மூலம் நெடுவிளை, கோவிந்தப்பேரி, கரிசல், ஓடைக்கரை மற்றும் இடையன்குளம் கிராம மக்கள் ஒருவருக்கொருவர் நெருங்கிய உறவினர்களாக இருந்தார்கள் என்பதை அறிய முடிகிறது. இக்கிராமங்களின் பெரியோர்களும் இந்த செய்தியை பாரம்பரிய செவிவழிச் செய்தி மூலம் உறுதிபடுத்துகிறார்கள்.

## ரேனியஸால் நியமிக்கப்பட்ட சபை ஊழியர் சத்தியநாதன் மூலம் கோவிந்தப்பேரி மற்றும் சுற்றுக் கிராமங்களில் நற்செய்திப்பணி

1825 பெப்ரவரியில் கரிசல், ஓடைக்கரை மற்றும் கோவிந்தப்பேரி ஆகிய சபைகளை சந்திப்பதற்காக ரேனியஸ் ஐயரவர்கள் வருகை தந்த போது கரிசல் சபை மக்களின் உறுதியான விசுவாச நம்பிக்கைகளை நேரில் பார்த்தவுடன், உடனடியாகத் தம்மோடு வந்திருந்த கோவிந்தப்பேரி சபை ஊழியர் சத்தியநாதனை கரிசல் சபை உபதேசியாராக ரேனியஸ் நியமித்தார். இவர் ஒரு உத்தம ஊழியன் என்றும் சாதுரிய பிரசங்கியார் என்றும் அடிக்கடி கரிசல் மற்றும் சுற்றி இருந்த அனைத்து கிராமங்களுக்கும் சென்று நற்செய்தி அறிவித்து வருகிறார் என்றும் ரேனியஸ் லண்டன் சி. எம். எஸ். தாய் சங்கத்தாருக்கு அனுப்பிய மிஷன் ரிப்போர்ட்கள் மூலம் அறிகிறோம். இவரது உண்மை ஊழியம் கரிசல் மற்றும் சுற்று வட்டார கிராமங்களை விரைவில் கிறிஸ்துவண்டைக் கொண்டுவந்தது. கரிசல் கிராமத்திற்கு அவர் வருவதற்கு ஒரு ஆண்டுக்கு முன்பாக 1824 முதல் 1825 வரை ஓராண்டு காலம் சத்தியநாதன் உபதேசியார் கோவிந்தப்பேரியில் தங்கி சபை ஊழியராகப் பணியாற்றியவர். கோவிந்தப்பேரியில் அந்த ஓராண்டில் அனேகரை கிறிஸ்துவுக்கென்று ஆத்தும ஆதாயம் பண்ணி இருந்தார். அவரை கரிசல் கிராமத்திற்கென தனியாக 1825 பெப்ரவரியில் சபை ஊழியராக கரிசலில் தங்கி பணி செய்யும்படி ரேனியஸ் நியமித்தார். 1829 வரை அந்த பணி தொடர்ந்தது. இந்த நான்காண்டுகளில் கோவிந்தப்பேரி ஓடைக்கரை திருச்சபைகளின் சபை ஊழியராகவும் சத்தியநாதனே பணி செய்திருக்க வேண்டும் என்பதை அறிய முடிகிறது.

## ரேனியஸின் மிஷன் சுற்றுப்பயணத்தில் கோவிந்தப்பேரி திருச்சபை (1827)

1827 இல் டிசம்பர் மாதம் 16 மற்றும் 17 ஆகிய இரண்டு நாட்களில் ரேனியஸ் ஐயரவர்கள் தமது மிஷன் ஊழிய சுற்றுப் பயணத்தில் கரிசல், ஓடைக்கரை, கோவிந்தப்பேரி ஆகிய கிராம சபைகளை சந்தித்திருப்பது குறித்து ரேனியஸ் ஐயரவர்களின் நாட்குறிப்புகளில் தெளிவாகப் பார்க்க முடிகிறது. அந்நேரம் கரிசலில் நான்கு பேர் ஞானஸ்நானத்துக்கு ஏற்ற கிறிஸ்தவ விசுவாசம் போதிய வேத அறிவு உடையவர்களாக இருந்தபடியால் அவர்களுக்கு தாம் ஞானஸ்நானம் கொடுத்ததாகக் குறிப்பிட்டுள்ளார். 16. 12. 1827 இல் ரேனியஸ் ஐயரவர்கள் கோவிந்தப்பேரிக்கு சென்றார்கள். கோவிந்த பேரி சபையார் கிறிஸ்தவ அறிவில் நன்கு வளர்ச்சி அடைந்திருப்பதைக் கண்டு கோவிந்தப்பேரியில் ஒன்பது பெரியோர்களுக்கும், ஏழு குழந்தைகளுக்கும் ஞானஸ்நானம் கொடுத்ததாக தமது மிஷன் ரிப்போர்ட்டில் ரேனியஸ் ஐயரவர்கள் குறிப்பிடுகிறார். அது குறித்த தகவல்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

## கோவிந்தப்பேரி ஞானஸ்நான விபரங்கள்

### பருவங்கடந்த ஞானஸ்நான விபரங்கள் 16. 12. 1827

1. குடும்பத் தலைவர் சுப்பிரமணிய நாடார் இவரது தந்தை மற்றும் தாய் பெயர் கொடுக்கப்படவில்லை. சுப்பிரமணிய நாடாரின் வயது 45. சுப்பிரமணிய நாடாருக்கு பேதுரு என்ற பெயரில் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது.
2. சுப்பிரமணியன் நாடாரின் மனைவி பெயர் பேச்சி. இவரது வயது 40 இவருக்கு கொடுக்கப்பட்ட ஞானஸ்நானப் பெயர் பேரின்பம்.
3. சுப்பிரமணிய நாடாரின் மூத்த மகன் பெயர் முத்துப்பாண்டியன் இவரது வயது 27. இவருக்கு கொடுக்கப்பட்ட ஞானஸ்நானப் பெயர் முத்து. இவரே சபைத் தலைவர் ஆக இருந்தவர்.
4. முத்து என்ற முத்துப்பாண்டியனின் மனைவி பெயர் பூவுப்பிள்ளை இவரது வயது 17 இவருக்கு கொடுக்கப்பட்ட ஞானஸ்நானப் பெயர் பேரின்பம்.
5. சுப்பிரமணிய நாடாரின் இளைய மகன் பெயர் லட்சுமணன் இவரது வயது 17. இவருக்கு கொடுக்கப்பட்ட ஞானஸ்நானப் பெயர் ஞானப்பிரகாசம்.

### இரண்டாம் குடும்பம்

6. இரண்டாம் குடும்பத்தில் குடும்பத் தலைவர் பெயர் இல்லை. அவர் ஞானஸ்நானம் நடைபெற்ற வேளையில் உயிரோடு இருந்தாரா என்பது குறித்து தகவல் இல்லை. குடும்பத் தலைவியின் பெயர் திருப்பரமம்மை, இவரது வயது 50. திருப்பரமம்மைக்கு கொடுக்கப்பட்ட ஞானஸ்நானப் பெயர் பேரின்பம்.
7. திருப்பரமம்மையின் மகன் ஆத்திமுத்து. இவரது வயது 33, ஆத்திமுத்துக்கு ஞானஸ்நானத்தில் கொடுக்கப்பட்ட கிறிஸ்தவப் பெயர் தேவசகாயம்.
8. தேவசகாயம் ஆத்திமுத்துவின் மனைவி பெயர் மாடத்தி இவரது வயது கொடுக்கப்படவில்லை. இவருக்கு ஞானஸ்நானத்தில் கொடுக்கப்பட்ட கிறிஸ்தவ பெயர் பரிபூரணம்.

### மூன்றாவது குடும்பம்

9. மாசாணம் என்ற பெண் இவரது வயது 30. இவரது பெற்றோர் பெயரோ இவரது கணவன் பெயரோ குறிப்பிடப்படவில்லை இவருக்கு ஞானஸ்நானத்தில் கொடுக்கப்பட்ட பெயர் சாந்தாயி இவரது கணவர் பெயரோ பெற்றோர் பெயரோ குறிப்பிடப்படவில்லை.

மேற்கண்ட 9 பேர்களுக்கு பருவம் கடந்த ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டுள்ளது.

## கோவிந்தப்பேரியில் 16. 12. 1827 அன்று கொடுக்கப்பட்ட ஏழு குழந்தைகள் ஞானஸ்நானங்கள்

1. அதே நாளில் முதல் குடும்பத்தில் முத்துப்பாண்டியன் - பரிபூரணம் பூவுப்பிள்ளை தம்பதியரின் மூன்று பெண் குழந்தைகளுக்கு குழந்தைகள் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டுள்ளது.

2. இரண்டாம் குடும்பத்தில் தேவசகாயம் ஆத்திமுத்து - பரிபூரணம் மாடத்தி தம்பதியரின் நான்கு பெண் குழந்தைகளுக்கு குழந்தைகள் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆக அதே நாளில் ஏழு பெண் குழந்தைகளுக்கு குழந்தைகள் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டுள்ளது.

## கோவிந்தப்பேரி CMS தொடக்கப்பள்ளி ஓடைக்கரைக்கு மாற்றப்படுதல் 1829

கரிசல் மற்றும் கோவிந்தப்பேரி ஆகிய இரண்டு இடங்களில் இருந்தும் பிள்ளைகள் பள்ளிக்கு வருவதற்கு ஏற்ற இடமாக இரண்டு ஊருக்கும் மத்தியில் ஓடைக்கரை இருந்தபடியால் 1829 இல் கோவிந்தப்பேரியில் நடைபெற்று வந்த தொடக்கப் பள்ளியானது ஓடைக்கரைக்கு மாற்றப்பட்டது என்ற செய்தியை மிஷன் ரிப்போர்ட்களில் ரேனியஸ் ஐயரவர்கள் குறிப்பிடுகிறார்.

இராமன் என்ற யோவான் ஆசிரியர் ஓடைக்கரை பள்ளிக்கு ஆசிரியர் ஆகவும், கூடுதலாக ஓடைக்கரை தேவாலயத்திற்கு சபை ஊழியராகவும் 1829 இல் ரேனியஸ் ஐயரவர்களால் நியமிக்கப்பட்டார். 1829 ஆம் ஆண்டு ஜூலை 28 மற்றும் 29 நாட்களில் கரிசல், ஓடைக்கரை, கோவிந்தப்பேரி சபைகளைச் சந்தித்த போது ரேனியஸ் ஐயரவர்கள் 29. 07. 1829 அன்று ஓடைக்கரை தொடக்கப்பள்ளிக்குச் சென்று பள்ளியை ஆய்வு செய்தார். பள்ளிக் குழந்தைகளின் கல்வி அறிவைச் சோதித்து அவர்கள் கல்வியில் நன்கு தேர்ச்சி பெற்றிருப்பதைக் கண்டு மகிழ்ச்சி அடைந்ததோடு அதைத் தமது மிஷன் ஊழிய நாட்குறிப்பில் குறித்துள்ளார்.

## 1829 ஜூலையில் கோவிந்தப்பேரி சபையை சந்தித்தது குறித்த ரேனியஸின் மிஷன் குறிப்பு

1829 ஜூலை மாதம் 29 ஆம் நாள் மாலை வேளையில் கோவிந்தப்பேரிக்கு வருகை தந்த ரேனியஸ் ஐயரவர்கள் சபை நிலை குறித்து ஓர் குறிப்பைத் தருகிறார். கோவிந்தப்பேரியில் திருமணத்திற்கு முன் சிறந்த கிறிஸ்தவராக நன்கு நடந்து கொண்டிருந்த சபைத்தலைவர் கிறிஸ்தவர் அல்லாத பெண்ணைத் திருமணம் செய்திருப்பதாகவும், அந்த பெண்ணைத் திருமணம் செய்த பின் ரொம்பவும் கெட்டு விட்டார் எனக் குறிப்பிடுகிறார். மேற்கண்ட மிஷன் குறிப்பு சபைத் தலைவர் முத்துப்பாண்டியன் சீதாலெட்சுமியை திருமணம் செய்த பின் பின்மாற்றம் அடைந்தது குறித்து சொல்லப்பட்டுள்ளது.

## கோவிந்தப்பேரியில் வசித்து வந்த இராமன் என்ற யோவான் உபதேசியார்

இராம பக்தரான இராமன் என்றொரு திருமணமாகாத வாலிபர் பாபநாசத்தில் இருந்து கோவிந்தப்பேரிக்கு 1824 ஆம் ஆண்டு வந்து அங்கேயே தங்கி வசித்து வந்தார். அவர் தென்மேற்கு நெல்லை மற்றும் மேற்கு நெல்லை வட்டார கிராமங்களில் வைணவ மதப் பிரச்சாரம் செய்து வந்தார். தம் சாதியினர் ஆகிய நாடார் சமூகத்தினரை இராம பக்தராக மாற்ற வேண்டும் என்பதே அவரது குறிக்கோள் ஆக இருந்தது. திருமணமாகாத சந்நியாசி போதகராக இருந்த அவரை இந்து நாடார்கள் மிகுந்த மதிப்புடன் குருவாக மதித்து அவர் தங்களது ஊருக்கு வருவதைப் பெரும் பேறாக எண்ணினர்.

## இராமனின் மனமாற்றம்

கோவிந்தப்பேரி, ஓடைக்கரை மற்றும் கரிசலில் சபை ஊழியம் செய்து வந்த சத்தியநாதன் உபதேசியாரின் பிரசங்கத்தைக் கேட்ட அவரது உள்ளத்தில் மாற்றம் ஏற்பட்டது. பரிசுத்த ஆவியானவர் அவரோடு பேசினார். இராமன் கோவிந்தப்பேரியில் இருந்து மூன்று கி. மீ தொலைவில் இருந்த கரிசல் கிராமத்திற்கு அடிக்கடி சென்று அங்கு தங்கியிருந்த சத்தியநாதன் உபதேசியார் மூலம் கிறிஸ்தவ உபதேசத்தை அறிந்து ஆராயலானார். சத்தியநாதன் அவருக்கு நற்செய்தி துண்டுப் பிரசுரங்களையும், நான்கு சுவிசேஷங்கள் அடங்கிய நூலையும் கொடுத்தார். கல்வியறிவு மிக்கவராக இருந்த இராமர் சுவிசேஷ நூல்களை நன்கு வாசித்தார். ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார்.

## இராமனும் கோவிந்தப்பேரி ஊராரும் ஞானஸ்நான ஆயத்தக்காரர் ஆகுதல்

இராமனும் கோவிந்தப்பேரி ஊரார் சிலரும் 1825 முதல் ஞானஸ்நான ஆயத்தக்காரராக சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். இராமனைக் குறித்து சத்தியநாதன் உபதேசியார் மூலம் அறிந்து கொண்ட ரேனியஸ் ஐயரவர்கள் இராமனைச் சந்தித்து இராமனின் கிறிஸ்தவ விசுவாசத்தையும், அறிவையும் கல்விச்சிறப்பையும் பாராட்டினார்.

## இராமன் பள்ளி ஆசிரியர் ஆகுதல்

ரேனியஸ் ஐயரவர்கள் 1825 இல் தாம் கரிசலில் தொடங்கிய பள்ளியில் இராமனை ஆசிரியர் ஆக்கினார். 1825 முதல் 1829 வரை நான்கு ஆண்டுகள் இராமன் கரிசல் பள்ளியிலும், கோவிந்தப்பேரி பள்ளியிலும் நான்கு ஆண்டுகள் ஆசிரியராகப் பணி புரிந்தார்.

## இராமன் ஞானஸ்நானம் பெறுதல்

1826 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் ரேனியஸ் ஐயரவர்கள் மிஷன் சுற்றுப்பயணம் செய்து ஞானஸ்நான ஆயத்தக்காரர் ஆக சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களை நேரில் சந்தித்து சோதித்து அவர்களில் தகுதியுள்ளவர்களாகக் கொண்டவர்களை பாளையங்கோட்டைக்கு சென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள கட்டளையிட்டார். கோவிந்தப்பேரியில் ஞானஸ்நான ஆயத்தக்காரர் ஆக சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களில் இராமனுக்கு 10. 10. 1826 இல் யோவான் என்ற பெயரில் பாளையங்கோட்டையில் வைத்து ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது.

## கரிசல் சபை ஊழியராக இராமன் என்ற யோவான் நியமிக்கப்படுதல்

கரிசலில் 1825 முதல் 1829 வரை இராமன் நான்கு ஆண்டுகள் ஆசிரியராக பணி செய்தார். 1829 இல் இராமன் என்ற

யோவான் கரிசல் சபை ஊழியராக நியமிக்கப்பட்டார். கரிசலில் தங்கியிருந்து கரிசல், ஓடைக்கரை, கோவிந்தப்பேரி ஆகிய, ஆகிய கிராமங்களில் இராமன் என்ற யோவான் சபை ஊழியர் பணியைத் திறம்படச் செய்து வந்தார்.

## கோவிந்தப்பேரி இராமன் என்ற யோவானின் திருமணம்

கரிசல் சபையில் ஞானஸ்நான ஆயத்தக் காரியாயிருந்த சந்தானம் அம்மாளை இவர் திருமணம் செய்திருந்தார். இத்தம்பதியருக்கு 1834 இல் பெண் குழந்தையும் பிறந்தது. 22. 03. 1835 இல் இராமர் என்ற யோவான் உபதேசியாரின் மனைவி சந்தானம் அம்மாள் மற்றும் உபதேசியாரின் ஆறு மாத பெண் குழந்தை ஆகியோருக்கு பரிபூரணம் மற்றும் பாக்கியம் என்ற பெயர்களில் கரிசல் தேவாலயத்தில் வைத்து கனம். ஜான் தேவசகாயம் ஐயரவர்களால் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது.

## சபைத்தலைவர் முத்துப்பாண்டியனின் பின்மாற்றம்

கிறிஸ்தவராகி சபைத் தலைவர் ஆக இருந்த முத்துப்பாண்டியன் முதல் மனைவியின் மரணத்திற்கு பின் 1829 இல் பாண்டிய அரச வழி மரபில் வந்த இடையன்குளத்தைச் சார்ந்த சீதாலெட்சுமியைத் திருமணம் செய்தார். சீதாலெட்சுமி ஆளுமை திறன் கொண்ட வலிமையான தலைவராக இருந்தார். இவரது காலத்தில் ஜமீன்தார் போன்று இக்குடும்பத்தினர் வாழ்ந்துள்ளனர். சுடலை மாடசாமி வழிபாட்டில் அதிக பற்று கொண்டவராக சீதாலெட்சுமி இருந்தார். ஏற்கனவே இடையன்குளத்தில் சுடலைமாடசாமி வழிபாடே அக்காலத்தில் காணப்பட்டது. இவரை திருமணம் செய்த பின் சபைத்தலைவர் முத்துப்பாண்டியன் கிறிஸ்தவத்தை விட்டு பின் வாங்கி தம் மனைவியைப் போன்று சுடலை மாடசாமி வழிபாட்டில் தமது தந்தை வழி முன்னோர் வழிபட்டு வந்த மலையாள சுடலைமாட சாமியையும் தமது மனைவி சீவலப்பேரிக்கு சென்று வந்தவுடன் அவரோடு வந்த சீவலப்பேரி மேட்டு சுடலை மாடசாமியையும் மீண்டும் வழிபடத் தொடங்கினார். இவரை முன்வைத்து 1829 இல் கோவிந்தப்பேரி சபைத் தலைவர் கிறிஸ்தவர் அல்லாத பெண்ணை திருமணம் செய்த பின் ரொம்ப கெட்டுப் போய்விட்டார் என ரேனியஸ் ஐயரவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## ரேனியஸ் ஐயரவர்களுக்குப் பின் கோவிந்தப்பேரி சபை

1835 இல் இரேனியஸ் ஐயரவர்கள் CMS மிஷன் தலைமை கண்காணிப்பு மிஷனெரி பொறுப்பில் இருந்து பணிநீக்கம் செய்யப்பட்டார்கள். இதன் காரணமாக 1835 ஜூனில் திருநெல்வேலியை விட்டு வெளியேறி தூத்துக்குடிக்கு சென்று அங்கிருந்து கடல் மார்க்கமாக சென்னை சென்று பின் ஆற்காட்டை தலைமையிடமாகக் கொண்டு ஜெர்மன் இவாஞ்சலிக்கல் மிஷன் எனும் மிஷனெரி சங்கத்தை நிறுவி சிறப்பாக ஊழியம் செய்து வந்த நிலையில் திருநெல்வேலி மாவட்ட உபதேசியார்கள் அவரை மீண்டும் திருநெல்வேலிக்கு வந்து மிஷன் ஊழியத்திற்கு தலைமை தாங்குமாறு கண்ணீர் கடிதங்களை அனுப்பினர். அதை ஏற்று திருநெல்வேலி வந்து சிந்துபூந்துறையில் மிஷன் வீடு கட்டி ஊழியத்தைத் தொடர்ந்தார். திருநெல்வேலி – கன்னியாகுமரி நெடுஞ்சாலைக்கு மேல்புறம் இருந்த பெரும்பாலான சபைகள் பெற்றிட் தலைமையிலான CMS மிஷனில் இருந்து விலகி ரேனியஸ் பக்கம் சேர்ந்தன. அவை மேல் பக்கத்தார் எனப்பட்டது. சில சபைகள் பெற்றிட் பக்கம் நின்றன. சில சபைகள் இருபக்கமும் இருந்தன, சில சபைகள் இருபக்கமும் சேராமல் நடுநிலை வகித்தன. கோவிந்தப்பேரி சபை அந்நேரம் எந்த நிலையை எடுத்தது என்பதை அறிய இயலவில்லை.

1838 இல் ரேனியஸ் ஐயரவர்கள் மரணம் அடைந்ததார்கள். அதன்பின் மேல் பக்கத்தார் சபைகள் படிப்படியாக பெற்றிட் தலைமையிலான CMS மிஷனில் சேர்ந்தன.

## டோனாவூர் மிஷனெரி கனம். டென்ற் மேற்பார்வையில் கோவிந்தப்பேரி சபை

1836 இல் டோனாவூர் மிஷனெரி கனம். டென்ற் மேற்பார்வையில் கோவிந்தப்பேரி சபை இருந்ததைக் குறித்து மிஷன் குறிப்புகள் மூலம் அறிகிறோம். 1835 இல் கரிசல் சபை ஊழியர் யோவான் உபதேசியார் செவல் சபைக்கு மாற்றம் செய்யப்பட்ட நிலையில் நிர்விசாரங்கள், இந்து சடங்காச்சாரங்கள் கரிசல் மற்றும் சுற்றுக் கிராம சபைகளில் புகுந்தன. இதை அறிந்த கனம். டென்ற் தமக்கு கீழ் பணி செய்த பக்தியும் திறமையும் மிகுந்த சபைஊழியர் ஒருவரை 1836 இல் கரிசலுக்கு நியமித்தார். இவர் அக்காலத்தில் கரிசல், ஓடைக்கரை, கோவிந்தப்பேரி ஆகிய அடுத்தடுத்து உள்ள இம்மூன்று கிராமங்களில் சிறப்புறப் பணி செய்தார். இவரது பெயர் குறிப்பிடப்படவில்லை.

## கோவிந்தப்பேரி திருச்சபையின் இருண்ட காலம்

கோவிந்தப்பேரி சபைத்தலைவர் திரு. முத்துப்பாண்டியன் இடையன்குளத்தைச் சார்ந்த சீதாலெட்சுமியை 1829 இல் திருமணம்செய்த பின் பின்மாற்றம் அடைந்தார். சீதாலெட்சுமியின் திருமணத்தில் இருந்து சீதாலெட்சுமியின் மரணம் வரையிலான காலகட்டம் கோவிந்தப்பேரி திருச்சபையின் இருண்ட காலம் ஆக பார்க்கப்படுகிறது.

## கோவிந்தப்பேரி திருச்சபையின் இடைக்கால வளர்ச்சி

1824 தொடக்கத்தில் ரேனியஸ் ஐயரவர்களின் நற்செய்திப் பணியால் முழு கிறிஸ்தவ கிராமமாக மாறிய கோவிந்தபேரியில் அந்நேரம் ஊர் பொது கோயிலாக இருந்த கோயில் 01. 03. 1824 இல் தேவாலயமாக மாற்றப்பட்டு ஜெப வழிபாடுகள் நடத்தப்பட்டு வந்த சூழ்நிலையில் சபைத் தலைவர் முத்துப்பாண்டியன் கிறிஸ்தவர் அல்லாத பெண்ணாகிய சீதாலெட்சுமியை 1829 இல் திருமணம் செய்த பின் கோவிந்தப்பேரியில் பின்மாற்றம் ஏற்பட்டு மீண்டும் சுடலைமாடசாமி வழிபாடுகள் நடைபெறத் தொடங்கியதை ஏற்கனவே பார்த்தோம். தேவாலயமாக மாற்றப்பட்ட கோயில் தொடர்ந்து தேவாலயமாகவே செயல்பட்டு வந்தது. சீதாலெட்சுமியின் மறைவுக்குப் பின் முத்துப்பாண்டியன் – சீதாலெட்சுமி தம்பதியரின் பிள்ளைகளில் அந்நேரம் கோவிந்தப்பேரியில் வசித்து வந்த மூத்த மகனாகிய ஞானமுத்து நாடார் குடும்பத்தினர் தங்கள் தாத்தா காலத்தைப் போன்று

கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொள்ள ஆரம்பித்தனர். ஞானமுத்து நாடாரின் ஆறு ஆண் பிள்ளைகளில் நான்கு பிள்ளைகளின் குடும்பத்தினர் முழுமையாக கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்டனர். துரைப்பாண்டியன் மற்றும் பொன்னையா நாடார் ஆகிய இரு குடும்பத்தினரில் ஒரு பகுதியினர் கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்டனர்.

## கோவிந்தப்பேரியில் புதிய தேவாலயக் கட்டுமானப் பணி தொடக்கம்

புதிய தேவாலயம் கட்ட கோவிந்தப்பேரியில் கீழ்க்கண்ட மூவர் தலைமையில் புதிய தேவாலய கட்டுமான குழு அமைக்கப்பட்டது. ஜெபமணி, தேவ பிச்சை டேவிட், ஆசிரியர் தேவசகாய பாண்டி. புதிய தேவாலய கட்டுமான பணியைப் பொறுப்பேற்றுக் கொண்ட கனோன். அருள்திரு. டேவிட் சாமுவேல் ஐயரவர்கள் மேற்கூறையாக ஓலை வேயப்பட்ட தேவாலயமே 01.03.1824 முதல் கோவிந்தப்பேரியில் இருந்து வந்தது. அதை முழுவதும் அகற்றி நல்ல அடித்தளத்துடன் கூடிய சுண்ணாம்பு கொண்டு கட்டப்படுகிற காரைக்கட்டிட தேவாலயம் அமைத்து மேற்கூறையாக ஓடு போட வேண்டும் என்ற எண்ணம் சபை மக்களிடம் இருந்து வந்தது. ஆனால் அக்காலத்தில் சபை மக்களின் எண்ணிக்கை குறைவாக இருந்ததால் அந்த பணியை தொடங்க கால தாமதம் ஆகி வந்தது. கோவிந்தப்பேரி திருச்சபையைச் சார்ந்த மூன்று பேர் கொண்ட கட்டுமானக் குழு அமைக்கப்பட்டிருந்தது. இப்பணிக்கு முழு உதவிகளையும் செய்ய ஓடைக்கரையைச் சார்ந்த மலேசியாவில் குருவானவர் ஆக பணி செய்து வந்த கனோன் அருள்திரு. டேவிட் சாமுவேல் ஐயரவர்கள் முன் வந்தார்கள். தமது சொந்த ஊரான ஓடைக்கரைக்கு வருகை தந்த போது தமது ஊருக்கு மிக அருகில் இருந்த கோவிந்தப்பேரியில் சிறந்ததோர் காரைக்கட்டிட தேவாலயத்தை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு ஏற்பட்டது. அதை அவர் தமது உறவினரான ஓடைக்கரையில் வசித்து வந்த திரு. தானியல் ரைட்டர் அவர்களிடம் சொல்லி அதற்கான ஏற்பாடுகளைச் செய்யச் சொன்னார். இக்காரியத்தில் அக்காலத்து கோவிந்தப்பேரி திருச்சபையார் முழு உதவிகளையும் பக்கபலமாக இருந்து செய்ய முன் வந்தார்கள். நல்ல தரமான சுண்ணாம்பு தாழையூத்தில் இருந்து கொண்டு வரப்பட்டது.

நல்ல கருங்கற்கள் கல்குவாரியில் இருந்து கொண்டுவரப்பட்டது. கட்டுமானப் பணி நடைபெறுகிற நாட்களில் அக்காலத்து கோவிந்தப்பேரி திருச்சபையார் கட்டுமான பணியாளர்களாக உடன் இருந்து உதவி செய்தார்கள். அனைத்து கட்டுமான செலவினங்களுக்கும் பண உதவியை கனோன் அருள்திரு. டேவிட் சாமுவேல் ஐயா அவர்கள் மலேசியாவில் இருந்து திரு. தானியேல் ரைட்டர் அவர்களுக்கு அனுப்பி வைத்து அவர்கள் மூலமாக செலவினங்களுக்கு பணப்பட்டு வாடா செய்யப்பட்டது. நல்ல உயர் வகை மரங்களை கொண்டும் தரமான ஓட்டுகளைக் கொண்டும் மேற்கூரை சிறப்பாக அமைக்கப்பட்டது. கட்டுமான பணிக்காக ஆன செலவு மூன்றாயிரம் ரூபாய். அந்த முழு பணத்தையும் கனோன். அருள்திரு. டேவிட் சாமுவேல் ஐயரவர்களே கொடுத்திருந்தார்கள்.

36 1/2 அடி நீளம், 14 அடி அகலம் கொண்ட சிறப்பான தேவாலயம் கட்டி முடிக்கப்பட்டது புதிதாக கட்டப்பட்ட தேவாலயம் கிறிஸ்து தேவாலயம் என்ற பெயரில் 27. 09. 1967 அன்று நெல்லை பேராயர் மகாகனம். A. G. ஜெபராஜ் அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

## திருநெல்வேலி டயோசிசன் ஆண்டறிக்கை வருமான சுருக்கக் கணக்குப் படி கோவிந்தப்பேரி திருச்சபையின் படிப்படியான வளர்ச்சி

1. திருநெல்வேலி டயோசிசன் 1930 ஆம் ஆண்டு வருமான சுருக்கக் கணக்கு ஆண்டறிக்கைப்படி கோவிந்தப்பேரி சபையில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் 16 பேர். பரி. நற்கருணக்காரர்கள் 4 பேர்.
2. திருநெல்வேலி டயோசிசன் 1933 ஆம் ஆண்டு வருமான சுருக்கக் கணக்கு ஆண்டறிக்கைப்படி கோவிந்தப்பேரி திருச்சபையில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் 25 பேர் பரி. நற்கருணக்காரர்கள் 5 பேர்.
3. 1943 ஆம் ஆண்டு திருநெல்வேலி டயோசிசன் ஆண்டறிக்கைப்படி கோவிந்தப்பேரி திருச்சபையில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் 39 பேர். பரி. நற்கருணைக்காரர்கள் 19 பேர்.
4. 1947 - 1948 ஆம் ஆண்டு திருநெல்வேலி திருமண்டல ஆண்டறிக்கைப்படி கோவிந்தப்பேரி திருச்சபையில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் 37 பேர். பரி. நற்கருணைக்காரர்கள் 20 பேர்.
5. 1956 - 1957 ஆம் ஆண்டு திருநெல்வேலி திருமண்டல ஆண்டறிக்கைப்படி கோவிந்தப்பேரி திருச்சபையில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் 41 பேர். பரி. நற்கருணைக்காரர்கள் 24 பேர்.
6. 1962 - 1963 ஆம் ஆண்டு திருநெல்வேலி திருமண்டல ஆண்டறிக்கைப்படி கோவிந்தப்பேரி திருச்சபையில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் 17 பேர். பரி. நற்கருணைக்காரர்கள் 09 பேர்.
7. 1970 - 1971 ஆம் ஆண்டு திருநெல்வேலி திருமண்டல ஆண்டறிக்கைப்படி கோவிந்தப்பேரி திருச்சபையில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் 27 பேர். பரி. நற்கருணைக்காரர்கள் 17 பேர்.
8. 1997 - 1998 ஆம் ஆண்டு திருநெல்வேலி திருமண்டல ஆண்டறிக்கைப்படி கோவிந்தப்பேரி திருச்சபையில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் 64 பேர். பரி. நற்கருணைக்காரர்கள் 25 பேர்.
9. 2002 - 2003 ஆம் ஆண்டு திருநெல்வேலி திருமண்டல ஆண்டறிக்கைப்படி கோவிந்தப்பேரி திருச்சபையில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் 82 பேர். பரி. நற்கருணைக்காரர்கள் 41 பேர்.

## ஆலய விரிவாக்கம் மற்றும் புதிய கோபுரம்

### பிரதிஷ்டை

ஆலயத்தை சற்று விரிவாக்கி முன் மண்டபம் அமைத்து அதன் மேல் கோபுரம் கட்டுவதற்கு திரு. P. தேவபிச்சை டேவிட் அவர்கள் கட்டுமான பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார்கள். திரு. P. தேவ பிச்சை டேவிட் ஆசிரியர் அவர்களது அதிக முயற்சிகளால் ஆண்டவருடைய பெரிதான கிருபையினால் ஆலயம் சற்று விரிவாக்கப்பட்டு சிறப்பான முன் மண்டபம் அதின் மீது சிறந்ததோர் கோபுரம் கட்டி முடிக்கப்பட்டது. விரிவாக்கப்பட்ட தேவாலயம் மற்றும் புதிய கோபுரம் 05. 04. 2009 அன்று சேகரத் தலைவர் அருள்திரு. அருள் வேதநாயகம் ஐயரவர்கள் தலைமையில் நெல்லை பேராயர் மகாகனம். J. J. கிறிஸ்துதாஸ் அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

### கோவிந்தப்பேரியும் சபை ஊழியர்களும்

திரு. ஞானசேகர், திரு. பெரிய முத்து, திரு. துரைராஜ், திரு. மாணிக்கரத்தினம், திரு சுவாமிதாஸ், திரு தேவ தஞ்சம், திரு. ஜெயக்குமார் உட்பட பல சபை ஊழியர்கள் கோவிந்தப்பேரியில் சிறப்பாக சபை ஊழியம் செய்துள்ளார்கள். தற்போது திரு. ஞானதுரை அவர்கள் சபை ஊழியராக சிறப்பாகப் பணி செய்து வருகிறார்கள்.

### சிறப்பாக நடைபெற்ற கோவிந்தப்பேரி திருச்சபையின் இருநூற்றாண்டு விழா

கோவிந்தப்பேரி திருச்சபையின் இருநூற்றாண்டு விழா (1824 - 2024) சிறப்பு ஸ்தோத்திரக் கூட்டம் 2024 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 8, 9 (சனி, ஞாயிறு) நாட்களில் சிறப்பாக நடைபெற்றது. முதல் நாளான 09. 06. 2024 சனிக்கிழமை அன்று கரிசல் சேகர அளவிலான உபவாச கூடுகை கோவிந்தப்பேரி கிறிஸ்து தேவாலயத்தில் நடைபெற்றது. கன்னியாகுமரியைச் சேர்ந்த சகோ. S. M. ரதி ராஜா அவர்கள் அருட்செய்தியை வழங்கி கூடுகையை நடத்திக் கொடுத்தார்கள். முதல் நாள் இரவு 7. 30 மணியளவில் இருநூற்றாண்டு விழாவிற்காக ஆயத்த ஆராதனை நடைபெற்றது. இருநூற்றாண்டு விழா அன்று மாலை 3.00 மணிக்கு நடைபெற்ற பரி. ஞானஸ்நான ஆராதனையில் கரிசல் சேகர தலைவர் அருள்திரு. G. ஆரோன் துரைராஜ் ஐயரவர்கள் அருட்செய்தியை வழங்கினார்கள். அன்று மாலை 4. 00 மணிக்கு நடைபெற்ற இருநூற்றாண்டு விழா பண்டிகை ஆராதனையில் அருட்செய்தியை அருள்திரு. S. கிப்சன் ஜான்தாஸ் ஐயரவர்கள் வழங்கினார்கள். மாலை 6. 30 மணியளவில் அசன விருந்து சிறப்பாக நடைபெற்றது.

### தற்போதைய கோவிந்தப்பேரி திருச்சபை

2015 முதல் கோவிந்தப்பேரியில் ஞாயிறு பள்ளி தொடங்கப்பட்டு சிறப்பாக நடைபெற்று வருகிறது. 2017 முதல் சிறப்பு ஜெபக்கூடுகைகள், சிறப்பு ஜெபக் கூட்டங்கள், மாதந்தோறும் உபவாச ஜெபம், மாதந்தோறும் முன் இரவு ஜெபம் ஆகியவை கோவிந்தப்பேரி திருச்சபையில் நடைபெற்று வருகிறது. 2019 முதல் கோவிந்தப்பேரி திருச்சபையில் ஆண்கள் ஐக்கிய சங்கம் மற்றும் பெண்கள் ஐக்கிய சங்கம் சிறப்பாக நடைபெற்று வருகிறது. கோவிந்தப்பேரி திருச்சபையில் 23 குடும்பத்தினர் உள்ளனர்.


கிறிஸ்தவ
# வரலாற்றுச் சுவடுகள்

மாத ஆய்விதழ் சந்தா விபரம்

| சந்தா விபரம் | உள்நாடு |
|---|---|
| தனிப்பிரதி | ₹ 60 + நன்கொடை |
| ஆண்டு சந்தா | ₹ 600 + நன்கொடை |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹ 3000 + நன்கொடை |

வங்கி விபரம்

Name: Christian Historical Society

A/c Number : 1748 020000 4906

Bank name : Federal Bank

IFSC code: FDRL0001748

"கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்"
மாத ஆய்விதழை நீங்கள்
தொடர்ந்து பெற்றுக் கொள்ள
G-Pay மூலம் நன்கொடை செலுத்த
91767 80001 என்ற எண்ணுக்கு செலுத்தவும்
காசோலை மற்றும் வரைவோலை செலுத்த
'கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்'
( Christian Historical Society )
என்ற பெயரில் எடுக்கவும்

ஆசிரியர்

கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,
கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,
பங்களாச் சுரண்டை-627859,
தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)
04633 290401, 91767 80001

christianhistoricalsociety.in
tchsportal.co.in

christianhistorical@gmail.com



# CHS -LIBRARY RESEARCH AND DEVELOPMENT CENTRE

*"Remember the days of old; consider the years of many generations; ask your father, and he will show you, your elders, and they will tell you"*

*(Deut. 32:7 ESVA).*

*We, the People of God are exhorted to keep alive the memory of our faith history and pass it on to our sons and daughters. The Christian Historical Society endeavours to help Tamil-Christian community to fulfill this noble obligation.*

***All praise and glory be to God!***

***Shalom Greetings to you in the name of our Lord and Saviour Jesus Christ!***

*The Christian Historical Society (=CHS) is the fruit of the diligent efforts of numerous Tamil-Christian historians who in the light of Deuteronomy 32:7 seek to document as well as write the faith history of Tamil-Christian community with the active involvement of numerous young volunteers. To cover wider areas where our community has its roots, collaborations are underway with historians and like-minded individuals throughout Tamil Nadu.*

*By God's grace and with prayerful support of Friends, CHS has initiated several activities towards realising its objectives during the past five years since inception. The important ones being:*

- *Publication of the monthly magazine, Kristhava Varalaatru Suvadugal*
- *Reprinting books which contain historical accounts of Tamil-Christian community*
- *Compilation and digitalising of antiquarian texts and documents*
- *Organising Mission Tours to places of historical importance*
- *Establishment of a Library with space for Museum, Research, Seminars etc.*

*Currently, with the benevolent donation of land by a Friend, God has enabled CHS to start the building project for Library cum Research & Development Centre at Surandai. Few individuals are donating and have promised to donate portion of construction material. We need to buy remaining construction material and furnishings for the Library and Seminar Hall.*

*We cordially invite families, individuals and organisations to contribute generously to complete the momentous library building, God willing by June 2024.*

*In God's mission,*

*Manna Selvakumar*
*+91 9176780001*

முனைவர்.ஜான்சி பால்ராஜ்

நாவலாசிரியர், திருநெல்வேலி
+91 73971 56808



# புரட்சிப்புயல் ஏமிகார்மைக்கேல்

வரலாற்றுக் நெடுந்தொடர் –28

ஏமியின் முறிந்த கால் எலும்புகள் ஒன்றிணைய இயலாமலே போயிற்று. சற்றேனும் எழுந்து நடக்க முடியாமல், உயிர்க்கோளம் போல் சுற்றி சுற்றி சளைக்காமல் சேவை செய்து வந்த அப்பாதங்கள் இருபது ஆண்டுகள் கட்டிலிலேயே ஓய்வு கொண்டன. கால்களால் நிலத்தில் ஊன்றி நிற்க இயலவில்லையே தவிர உடலும், மனமும் எப்போதும் போல ஆரோக்கியமாகவே இயங்கியது.

படுக்கையில் இருந்தாலும் அவரது அலாதி அன்பும், கருணையும் அங்கிருந்த அனைவரையும் மிக நேர்த்தியாக இயக்கிக் கொண்டிருந்தது. எப்போதும் போல சமூகப் பணி தொய்வின்றி நடைபெற்றுக் கொண்டிருந்தது. அவர் ஏற்படுத்தி பழக்குவித்திருந்த அமைதிப்படையின் துருப்புகள் இன்னும் அதிகமாய் சீற்றத்தோடு செயல்பட்டனர். ஏமி அவ்வீராங்கணைகளை இயக்கும் மூளையாகச் செயல்பட்டார்.

பெண் குழந்தைகளின் பாதுகாப்பிற்கென்று 1992 ஆம் ஆண்டுமுதல் தமிழக அரசின் 'தொட்டில் குழந்தைத் திட்டம்' மாவட்டந்தோறும் அமல்படுத்தப்படும்வரை ஏமியின் காப்பகமே தென்னகத்தில் ஆதரவற்றோரின் தொட்டிலாக ஆடிக்கொண்டிருந்தது.

புதைகுழிகளுக்கும், கள்ளிப்பாலுக்கும் பலியாக இருந்த பச்சிளம் குழந்தைகளும் சமூகத்தால் புறந்தள்ளப்பட்டவர்களும் அவரது இல்லத்தை நோக்கி புற்றீசலாய் வந்து கொண்டிருந்தனர். தனது மறைவிற்குப் பிறகு தம்மவர்களில் மூத்தோரை அக்காப்பகத்தைத் திறமையாக நிர்வகிக்க பழக்குவித்தார். தனது எண்ணங்களைத் தொலைவில் படித்துக் கொண்டும் பணிசெய்து வாழ்ந்து கொண்டுமிருந்த தம் பிள்ளைகளுக்குக் கடிதங்கள் எழுதுவதிலும், நூல்கள் எழுதுவதிலுமாக கழித்தார். அவரது நூல்கள் அனைத்தும் சமூகத் தீமைகளைக் குறித்து தாம் ஆய்ந்தறிந்தவற்றை மிகைப்பாடின்றி அப்படியே பதிவு செய்யப்பட்டதாக உள்ளது. எழுதுவதில் நீலா என்ற பெண் அவருக்கு உதவினாள். இரவின் அமைதியில் எழுதும் பழக்கமுடைய ஏமியின் வாய்மொழிக் கருத்துக்களை மிகவும் நேர்த்தியாக எழுத்துக்களாக்கிய பெருமை ஏமியின் உற்றத் தோழியான அந்த நீலாவுக்கே உரியது. அவர் எழுதிய மொத்த நூல்கள் முப்பத்தெட்டு.

இந்தியா சுதந்திரம் அடைந்த (1947) அதே ஆண்டு தமிழகத்தில் தேவதாசிமுறை ஒழிப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டதென்ற தகவல் வந்ததும் ஏமியின் கண்களில் ஆனந்த கண்ணீர் வழிந்தோடியது. 'இனி எந்த நேரமும் எனக்கு மரணம் வந்தாலும் பரவாயில்லை' என்றவர், தனது கரங்களைக் குவித்து வானத்தை நோக்கி உயர்த்தி, 'சர்வவல்லமையுடைய தேவனுக்கு நன்றி' என்றார். "உடனடியாக இந்தச் செய்தியை நமக்குத் தெரிந்த அனைவருக்கும் தெரியப்படுத்துங்கள். கிராமங்கள்தோறும் சென்று வீடுவீடாகச் சொல்லுங்கள். மக்கள் விழிப்படையட்டும்' என்று அன்பாணையிட்டார்.

'முதலாவது இன்று மாலை நமது ஆலயத்தில் அனைவரையும் கூட்டி இந்த மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்து கடவுளுக்கு நன்றி கூறுங்கள். அத்தோடு இந்த முடிவுக்குக் காரணமாக உழைத்த சகோதரி முத்துலட்சுமி ரெட்டி, இராமாமிர்தம் என்ற பெண்களுக்காகவும் கடவுளுக்கு நன்றி செலுத்தி அவர்களுக்காக ஜெபியுங்கள்' என்றார்.

'நம்மைத் தொடர்ந்து அந்த இரு பெண்களும் தான் இத்தீங்கை எதிர்த்து பலவாறு போராடியவர்கள்'. 'இந்தியப் பெண்களுக்கு எதிரான கொடுமைகளை இந்தியர்களே எதிர்ப்பது தான் சிறந்த செயல் என்று இத்தேசத்தந்தையாம் மதிப்பிற்குரிய காந்தியடிகள் இந்தியப் பெண்களின் விடுதலைக்கு இந்தியப் பெண்களே எழுந்து போராட வேண்டும் என்று அவர்களைத் தூண்டி ஊக்குவித்தார்' என்றெல்லாம் பலவாறு கூறி மகிழ்ந்தார்.

எங்கோ பிறந்து வளர்ந்து, அவ்விரு பெண்களுக்கும் கால்நூற்றாண்டுகளுக்கு முன்பே இந்தியப் பெண் விடுதலைக்காகத் தன்னையே அர்ப்பணித்த தியாகச் செம்மலான அவரையோ மேல்மட்டத்தினர்களில் இதுவரை எவரும் பாராட்டியதோ கண்டு கொண்டதோ இல்லை.! காலச்சக்கரம் மட்டும் தனது இதயப் பெட்டிக்குள் அனைத்தையும் அடுக்கி வைத்துக் கொண்டு ஓடிக் கொண்டிருந்தது.

ஏமி படுத்தருந்த கட்டிலின் கால்கள் ஒரே இடத்தில்

நெடுங்காலமாக அவரது உடலைத் தாங்கி கொண்டிருந்ததன் அடையாளமாக இன்றும் அந்த அறையில் நான்கு பள்ளங்கள் வரலாற்றுச் சின்னங்களாக குழிந்து கிடக்கின்றன. ஏமி தனது எண்பத்தி மூன்றாவது வயதை நெருங்கிக் கொண்டிருந்தார். 1950ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கடுங்குளிரில் ஏமியின் உடல்நிலை மிகவும் மோசமானது. பெரும்பாலான நேரங்களில் சுயநினைவிழந்தே படுத்திருந்தார். மறு ஆண்டு ஜனவரி 18 ஆம் நாள் அதிகாலையில் அவர் கண்விழித்துப் பார்த்தபோது தன்னைச் சுற்றி முழங்காலில் நின்று வேதனையோடு இறை வேண்டல் செய்து கொண்டிருந்தவர்களை அன்பொழுகப் பார்த்தார்.

தன்னையே தாயாகவும், உலகமாகவும் எண்ணி வாழ்ந்த தம் மக்கள் மிகுந்த வேதனையில் தத்தளிப்பதை உணர்ந்து நெகிழ்ந்தார். அந்நேரம் மெல்லிய சத்தத்தில் அவர்களோடு ஏதோ கூற முயன்றார். . . ! நர்ஸ் எமினா, 'சொல்லுங்க அம்மா' என்று அவர் அருகில் முகத்தைத் தாழ்த்தினாள். 'என் மக்களே. . . நான் தூக்கத்தில் இருக்கும் போதே எடுத்துக் கொள்ளப்படுவேன். ஒருவரும் அழக்கூடாது. இனிய பாடல்களை மட்டும் அமைதியாகப் பாடுங்கள். எனக்குக் கல்லறை கட்டக்கூடாது. ஏன் என்றால் அறியாத மக்கள் என்னை கடவுளாக்கி அதை வணங்கி விடுவார்கள். கடவுள் ஒருவரை மட்டுமே வணங்க கற்பியுங்கள். எல்லோரையும் போலவே சாதாரணமாக அடக்கம் செய்யுங்கள். கவலை வேண்டாம் என் மக்களே. நான் என்னை அனுப்பின கர்த்தரிடம் தானே செல்கிறேன்.? நான் மிகவும் மகிழ்ச்சியாக உணர்கிறேன்' என்றார். பல நாட்களுக்குப் பிறகு அவரது குரலைக் கேட்ட அவர்கள் சற்று ஆறுதலடைந்தனர்.

முதன்முதலில் கோவிலில் இருந்து தப்பிவந்த இலட்சுமி என்ற ப்ரீனாதான் ஏமியின் மூத்தக்குழந்தை. அப்போது அவள் ஐம்பது வயதை கடந்துவிட்டிருந்தாள். ஆயினும் ஏமிக்கு, அவள் தன்னிடம் வந்துசேர்ந்த அன்று இருந்த அதே குழந்தை உருவிலேயே தெரிந்தாள். அந்த ப்ரீனா ஏமியின் கால்மாட்டில் முழங்காலில் கண்ணீர் மல்க நின்றிருந்தாள். அவளது கண்களையே உற்றுப் பார்ப்பது போல் தெரிந்த ஏமியின் பார்வை மீண்டும் உறக்கத்தில் ஆழ்ந்தன. இதயம் மட்டும் மெலிதாய்த் துடித்துக்கொண்டிருந்தது.

அவர் இந்தியாவிற்கு வந்து அரை நூற்றாண்டு ஆகியபோதும் தனது அன்பு தாயாரின் சாவுக்கும் கூட தாய்நாட்டிற்குச் செல்லாமல் தாளாத் துக்கத்தை மனத்திற்குள்ளேயே புதைத்துக் கொண்டு புன்னகையை முகத்தில் சுமந்தலைந்தவர். தான் பெற்றெடாத தனது குழந்தைகளின் பிரிவை தாங்க இயலாமல் தவித்தவர். இன்று காலச் சக்கரத்தின் கட்டாய நகர்வில் மரணத்தின் பிடியில் அமர்ந்திருந்தார்.

'மீண்டும் உயிர்பெற்று எழுந்து அமர்ந்துவிட மாட்டாரா. . ?' என்ற ஏக்கப்பார்வையோடு நின்று கொண்டிருந்தனர் அவரது மக்கள். இதயங்களின் வேதனையான துடிப்புச் சத்தம் மட்டுமே கேட்டுக் கொண்டிருந்த அந்தப் பேரமைதியில், அவரது மென்னுயிர் உடலை விட்டுப் பிரிந்து மாவெளிச்சத்தோடு இணைந்தது. காரிருள் மிகுந்த துக்கம் அனைவரையும் தழுவிக் கொண்டது. தாயை இழந்த பச்சிளங்குழந்தைகளைப் போல டோனாவூர் புலம்பியழுதது.

பொதுமக்களின் அஞ்சலிக்காக ஆதரவற்றோரின் அன்புத் தாய் வைக்கப்பட்டாள்.

சாதி, மதம், இனம் என்ற எப்பாகுபாடுமின்றி கேள்விப்பட்டோரெல்லாம் வந்து அவரது கருணையைச் சொல்லி சொல்லி கண்ணீர் சிந்தி மருகினர். காப்பகத்தாருக்கென்றே ஏற்படுத்தப்பட்டிருந்த கர்த்தரின் தோட்டம் என்ற கல்லறைத் தோட்டத்தில் எல்லோரையும் போலவே பாடையில் எடுத்துச் செல்லப்பட்டு குழியில் இறக்கி புதைக்கப்பட்டார்.

தனக்கென்று கல்லறை கட்டக் கூடாதென்ற அன்பு கட்டளையை அவரது மக்கள் நிறைவேற்றினர். ஆயிரக்கணக்கானோரின் புதைகுழிகள் உள்ள அத்தோட்டத்தில் ஏமியும் ஒருவராய் விதைக்கப்பட்டார். அவரை வைத்த இடத்தில் அடையாளத்திற்காக ஒரு சிறு கல் தொட்டி ஒன்றை வைத்துள்ளனர். எப்போதும் அதில் நீர் நிரம்பியிருக்கும், பறவைகள் அதில் நீராடி மகிழ்ந்திருக்கின்றன. . . !!


ஏமியின் உடல் இவ்வுலகப் பார்வையிலிருந்து மறைந்தாலும் அவரது அன்பும் அளவற்ற கருணையும் அக்காப்பகத்தை எப்போதும் நிறைத்தே வைத்திருப்பது தான் பேரதிசயம். அவரது அழியா ஆன்மா அங்கு அமைதியாய் உறங்கி கொண்டிருக்கிறது.

உலகெங்கிலுமிருந்து அவரது சேவையை அறிந்தவர்கள் வந்து அக்காப்பகத்தைப் பார்த்தும் உணர்ந்தும் செல்கின்றனர். அழகிய தனியொரு உலகம் போல் தெரியும் அக்காப்பகம் ஏமிக்கார்மைக்கேலின் பெயரை மொழியற்ற மௌனங்களால். . . அமைதியின் ஸ்வரங்களால் இசைத்துக் கொண்டே இருக்கின்றன. . . . இன்றும். . . . என்றும்!!

எம் தாயே. . . . !
கார்முகி லோடுகன மழையும்
கடுங்குளிர்
போர்புரி யும்வெம் பனியும்
செங்கதிர்
வெங்கோடை யதுவும் நின்மீது
தாக்காதே
கன்மலை யாகுமே நின்உளப்
பாங்கு.



விரைவில்
புதிய நாவல்
தாவீது சுந்தரானந்தம்






# கேட்டி வில் காக்ஸ்

(1889-1974)

Rev.G. P. இராஜா
CSI. பழனி நகர் குருசேகரம்

**பிறப்பு :**

அருட்பணியாளர் டாக்டர். கேட்டி வில்காக்ஸ் அவர்கள் அமெரிக்காவிலுள்ள கனெக்டிகட் மகாணத்தில் 1889 ஆம் ஆண்டு ஜுலை 26ம் தேதி ஜோசப் அன்னா தம்பதியருக்கு மகளாகப் பிறந்தார். கேட்டி வில்காக்ஸ் அவர்களுடன் எட்டு பேர்கள் உடன் பிறந்தவர்கள். இவருடைய பெற்றோர்கள் அனைத்து பிள்ளைகளையும் கிறிஸ்தவ விசுவாசத்திலும், கிறிஸ்தவ பண்புகளிலும் வளர்த்தார்கள். கேட்டி வில்காக்ஸ் அவர்கள் திருமறையை வாசிப்பதிலும், ஜெபத்திலும் அதிகமாக வளர்ந்தார். கல்வியிலும் சிறந்து விளங்கினார்.

கல்லூரி படிப்பு :

கேட்டி வில்காக்ஸ் அவர்கள் தமது கல்லூரி படிப்பை 1911 ஆம் ஆண்டு முடித்தார். அதன் பின்பு புகழ் பெற்ற கொலம்பியா பல்கலைக்கழகத்தில் ஆசிரியர் பயிற்சியையும் முடித்தார். ஆசிரியர் பணியை தொடங்கிய கேட்டி வில்காக்ஸ் அவர்கள் எதிர்கால தலைமுறையினரை சிறந்த முறையில் உருவாக்க அர்ப்பணிப்புள்ள ஆசிரியராக நான்கு ஆண்டுகள் பள்ளியில் ஆசிரியர்ப்பணியை செய்தார்.

ஊழிய அழைப்பு:

பெண்களுடைய கல்வியை கருத்தில் கொண்டு கேட்டி வில்காக்ஸ் தன்னுடைய நாட்டை விட்டு பிற நாட்டு பெண்களின் கல்வியை முன்னேற்ற வேண்டும் என்ற தரிசனத்தோடு, கடவுளின் மிக துள்ளியமான அழைப்பை பெற்று, 1915 ஆம் ஆண்டு டிசம்பர் 11ம் தேதி தன்னுடைய 26 வது வயதில் தன்னுடைய குடும்பத்தையும், உறவுகளையும் விட்டு கர்த்தர் காண்பித்த தரிசன பூமியாகிய தமிழகத்திலுள்ள மதுரை மாவட்டத்திற்கு அமெரிக்கா ஐக்கிய சபையின் மூலம் வந்து சேர்ந்தார்.

கல்விப் பணி :

தன்னுடைய கல்விப்பணியை கேப்ரன்ஹால் பள்ளியில் ஆங்கிலம் மற்றும் கணித பாடத்தை கற்றுக்கொடுத்தார். இப்பணியை அப்பள்ளியின் தலைமை ஆசிரியர் அருட்சகோதரி. நாய்ஸ் அவர்களோடு இணைந்து பணியாற்றினார். வைகை ஆற்றுக்கு மறுபக்கம் தல்லாகுளம் பகுதியில் வாங்கிய பனந்தோப்பில் கல்வி நிறுவனங்களை உருவாக்குவது இவர்களுடைய கனவாகயிருந்தது. நாய்ஸ் சகோதரி இறந்த பிறகு கேட்டி வில்காக்ஸ் அவர்கள் தலைமை ஆசிரியர் பொறுப்பை பெற்று, மிக துடிப்புடனும், ஆர்வத்துடனும், அனைத்து பெண்களை அரவணைத்துக்கொண்டு அன்போடு கல்விப்பணியை செய்தார். ஏழை, எளிய பெண்களுக்கும். பெற்றோர்களால் கைவிடப்பட்ட பெண்களுக்கும் கல்விப்பணியை சிறப்பாக

செய்தார்.

பெண் கல்வி :

மதுரையில் பெண்களுக்கு கல்வி மறுக்கப்பட்ட நிலை, கிராமப்புற பெண்கள் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படாத நிலை காணப்பட்டது. சமுதாயத்தில் நசுக்கப்பட்ட பெண்கள், ஆண் ஆதிக்கத்தால் பெண் கல்வி மறுக்கப்பட்ட பெண் பிள்ளைக்களுக்கு கல்வி கொடுக்க நிதி திரட்டி சுமார் 31 ஏக்கர் நிலத்தை வாங்கி கல்வி நிறுவனம் தொடங்கப்பட்டது. இதன் அடிப்படையில் OCPM பெண்களுக்கென்று தொடங்கப்பட்ட பள்ளியாகும். சமூகத்தில் பெண் பிள்ளைகளை தேடி கண்டுபிடித்து கல்வி கொடுக்கப்பட்டது. கிராமப்புற பெண் பிள்ளைகள், வீட்டு வேலை செய்யும் பெண் பிள்ளைகள், ஆடு மாடு மேய்க்கும் பெண் பிள்ளைகள், கொத்தடிமையாக வேலை செய்யும் பெண் பிள்ளைகள், தாழ்த்தப்பட்ட பெண் பிள்ளைகள், குழந்தை திருமணம் செய்ய நினைத்த பெண் பிள்ளைகள், கடவுளுக்கென்று நேந்துவிட்ட பெண் பிள்ளைகளை கண்டு பிடித்து படிக்க வைத்தார். இப்பணிக்கென்று பொது மக்களிடமும், பெண் பிள்ளை பெற்றோரிடமும், உயர் குடி மக்களிடமும் கேட்டி வில்காக்ஸ் அவர்கள் அவமானத்தையும், நிந்தையையும், கேலி பேச்சையும், தவறான குற்றத்தையும் வாங்கிக்கொண்டு பெண் பிள்ளைகளை வாழ்வில் உயர்த்துவதே நிலையான பணிக்கு கல்வி பணியை தளராமல் செய்தார்.

பெண்களுக்கென்று ஆங்கில வழியாக கற்றுக்கொடுப்பதற்கு நாய்ஸ் மெட்ரிக்குலேசன் பள்ளியையும் தொடங்கினார். சமூதாயத்தில் பெண் அடிமை இருக்கக்கூடாது. பெண் கல்வி உயர வேண்டும் என்று தரிசனத்தோடும் தன்னுடைய வாழ்வையும் தியாகம் செய்தார். மதுரை மாவட்டத்தில் பெண்களுக்கென்று முதன் முதலில் லேடி டோக் பெண் கல்லூரியையும் உருவாக்கினார். இக்கல்லூரியை 1948 ஆம் ஆண்டு தன்னுடைய தோழி ஹெலன் டோக் மற்றும் அவரது கணவர் ஜேம்ஸ் டோக் உதவியோடு பெண் கல்லூரியை தொடங்கினார். மதுரை பட்டணத்திலும், அதன் சுற்றியுள்ள கிராமப்புறங்களிலும் அநேக பெண்களை வாழ்வாதரத்தையும் உயர்த்தினார்.

விண்ணுலக வாழ்வு :

கேட்டி வில்காக்ஸ் அவர்களுடைய பொன்மொழி 'எழுந்து கட்டுவோம் வாருங்கள்' என்பதாகும். திருமணம் செய்யாமலே தன் வாழ்வை மதுரையுள்ள பெண்களுக்காக தியாகம் செய்தார். 1974ஆம் ஆண்டு டிசம்பர் 17ம் தேதி விண்ணுலக வாழ்வுக்கு அழைப்பை பெற்றார். கேட்டி வில்காக்ஸ் அவர்கள் தன்னுடைய பெற்றோரையும், உறவுகளையும், தன்னுடைய ஆடம்பரமான வாழ்வையும், தன்கென்று எதையும் சேர்த்து வைக்காமல் தனக்கென்று இல்லாமல் பிறருக்காகவே வாழ்ந்து கர்த்தரிடம் இளைப்பாற சென்றார்.


கிறிஸ்தவ
# வரலாற்றுச் சுவடுகள்

கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் நடத்தும் கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள் மாத ஆய்விதழை நண்பர்கள், உறவினர்களுக்கு அறிமுகப்படுத்த அன்போடு கூட கேட்டுக் கொள்ளுகின்றேன். கடந்த நான்கு வருடங்களாக ஒவ்வொரு மாதமும் தொடர்ந்து வெளி வந்து கொண்டு இருக்கின்றது. மறைக்கப்பட்ட, மறைந்த, மறந்த வரலாற்றுப் பக்கங்களை அடுத்த தலைமுறையினரின் கரங்களில் கொடுப்பது நம் கடமை.

சங்கத்தின் **'கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்'** மாத ஆய்விதழை நீங்கள் தொடர்ந்து பெற்றுக் கொள்ள விரும்பினால் அதற்கான ஆண்டு சந்தா 600 ரூபாய் ஐந்து ஆண்டுக்கான சந்தா 3000 ரூபாய் மட்டுமே. மற்றும் G-Pay மூலம் நன்கொடை செலுத்த விரும்பினால் 91767 80001 என்ற எண்ணுக்கு செலுத்தவும். காசோலை மற்றும் வரைவோலை செலுத்த **'கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்'** (Christian Historical Society) என்ற பெயரில் எடுத்து அனுப்பவும்.

நன்கொடை சந்தா செலுத்திய தகவலை கொடுக்கப்பட்டுள்ள தொலைபேசி எண் அல்லது வாட்ஸ் ஆப் அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு மறக்காமல் தெரியப்படுத்தவும்.

**வங்கி விபரம்**

**Name: Christian Historical Society**

**A/c Number : 1748 020000 4906**

**Bank name : Federal Bank**

**IFSC code: FDRL0001748**

**ஆசிரியர்**

**கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,**
**கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,**
**பங்களாச் சுரண்டை-627859,**
**தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)**
**04633 290401, 91767 80001**

christianhistoricalsociety.in
tchsportal.co.in
christianhistorical@gmail.com



ந. சூரிய மூர்த்தி,
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்மொழித் துறை,
சென்னைப் பல்கலைக்கழகம் - 05



## சகலகலா கலைஞர்

## ராவ் சாகேப்

# ஆபிரகாம் பண்டிதர்

# "இராஜ கம்பீரக் குசால் பேர்வழி" யைப் பாடிய ஆபிரகாம் பண்டிதர்

1910 மே 7, சனிக்கிழமையன்று 7-வது எட்வர்ட் மன்னர் காலமாகிய அடுத்த நிமிடமே பிரிட்டிஷ் அரசாங்கத்தின் புதிய சக்ரவர்த்தியானார் அவரது இளைய குமாரரான ஐந்தாவது ஜார்ஜ். மூத்த சகோதரர் அரியணை ஏறி அரசாள, தமக்கு மிகுந்த விருப்பமுள்ள கடல்பிரயாணத்தில் ஒரு கடலோடியாகவே காலம் கழிக்கலாம் எனத் திட்டமிட்டவருக்கு எதிர்பாராத விதமாகக் கிடைத்த ராஜ யோகம் தான் பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜிய அரசாளுகை. 'ராஜ சிம்மாசனம் ஒரு நிமிடம்கூட காலியாயிருக்கக் கூடாது' என்னும் ஆங்கில அரசாங்கத்தின் முறைப்படி தந்தை இறந்தவுடனேயே பட்டத்திற்கு வந்தார் ஐந்தாம் ஜார்ஜ். அப்போது அவருக்கு வயது 45.

1891-ஆம் ஆண்டு தமது மூத்த சகோதரராகிய எட்வர்ட் இளவரசர் உடல் நலிவுற்று இறந்தபின்பு எவ்வித நிபந்தனைகளுமின்றித் தமது கப்பற்கனவைக் கைவிட்டு, அரசாங்கத்தில் நேரடியாகத் தலையிட்டே ஆகவேண்டியநிலை இவரை வந்தடைந்தது. மூத்த சகோதரர் இருந்தபோதும் இருவருக்குள்ளும் எவ்வித அரசாளும் போட்டிகளும் இல்லை. சிறுவயதிலிருந்தே ராஜகுடும்பத்துப் பிள்ளைகளுக்கு உண்டான சகல சௌகரியங்களையும் சகோதரர்கள் அனுபவித்து வந்தனர். கல்வி, கலை முதலானவற்றில் பயிற்சி பெற்றனர். ஆனால் மூத்தவரைக் காட்டிலும் இளையவர் சிறுவயதிலிருந்தே துணிவாகவும் விஷமச்சேட்டைகளை வேடிக்கையாகச் செய்யக்கூடியவராகவும் இருந்ததினால் 'ராஜ கம்பீரக் குசால் பேர்வழி' என்னும் பட்டமே அவருக்கு அக்காலத்தில் கிடைத்துவிட்டிருந்தது.

தந்தை இறந்ததும் சக்ரவர்த்தியாக ஐந்தாம் ஜார்ஜ் அறிவிக்கப்பட்டாலும் அதிகாரப்பூர்வமாக அரியணை ஏறியது கிட்டத்தட்ட ஓராண்டு கழித்து ஜூன் 22, 1911. இங்கிலாந்தில் உள்ள இலண்டன் மாநகரில் அவரது மகுடாபிஷேகம் வெகுவிமரிசையாக நடைபெற்றது. பின்பு அதே ஆண்டின் இறுதியில்தான் சக்ரவர்த்தியாக இந்தியாவிற்கு வருகை புரிந்தார். ஐந்தாம் ஜார்ஜ், சக்ரவர்த்தி ஆவதற்கு முன்னர் வேல்ஸ் இளவரசராக இருந்தபொழுதே தனது மனைவியுடன் குடியேற்ற நாடுகளுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது இந்தியாவிற்கு (1905ஆம் ஆண்டினளவிலேயே) வருகை புரிந்ததும் அப்போது பாரதியார் அவரது வருகைக்காக நல்வரவு பாடியதும் பாரதி இறந்த பின்பு அப்பாடலின் மீதான அறிஞர்களின் சர்ச்சைகளும் அனைவரும் அறிந்ததே.

1911, டிசம்பர் 12 அன்று டில்லி தர்பார் கூடியது. தர்பாருக்கு ஐந்தாம்ஜார்ஜ்நேரடியாகவிஜயம்செய்துதாம்சக்ரவர்த்தியானதை இராணுவ ஜெனரல் பேட்டன் வாயிலாக இந்திய மக்களுக்கு விளம்பரப்படுத்திக் கொண்டார். விருந்தாளிகள், படை வீரர்கள், வேடிக்கை பார்க்க வந்தவர்கள் எனக் கிட்டத்தட்ட இலட்சம் பேருக்கு இடம் ஏற்பாடாகியிருந்தது.

அரசாங்கப் பெருவிழாக்களின்போது வழக்கமாக அறிவிக்கப்படும் கல்விக்கான நன்கொடைகள், இனாம்கள், கைதிகள் விடுதலை, குறிப்பிடத்தக்க துறைகளில் சிறந்து விளங்கியவர்களுக்குக் கௌரவப் பட்டங்கள் முதலான பல திட்டங்களும் சலுகைகளும் உத்தரவாயின. ஜார்ஜ் மன்னரின் ஆக்ஞைப்படி லார்டு ஹார்டிஞ்ஜ் வெளியிட்ட இவ்வகையான அறிவிப்புகளில்தான் ராவ் பகதூர், திவான் பகதூர், கான் சாகிப், இராய் சாகிப், இராவ் சாகிப் முதலான கௌரவப் பட்டங்களை முன்னமே பெற்றவர்களுக்கும் இனிப் பெறப்போகிறவர்களுக்கும் தக்கவாறு அடையாளக் குறிகள் தரப்பட வேண்டும் என்கிற முன்மொழிவும் கொண்டுவரப்பட்டது. அதன்படி தர்பாரின் மூன்றாவது நாளான டிசம்பர் 14ஆம் நாள் இரவில் ஜார்ஜ் மன்னர்

கௌரவப்பட்டம் பெற்றவர்களுக்கான உரிய பதக்கங்களை வழங்கினார் என்பதும் வரலாறு.

இக்கௌரவப் பட்டங்கள் அறிவிக்கப்பட்ட ஜார்ஜ் மன்னரின் முடிசூட்டு வைபவத்தின்போதுதான் ஆபிரகாம் பண்டிதர் 'இராவ் சாகிப்' என்னும் பட்டத்தினையும் அதற்கான பதக்கத்தையும் பெற்றார். ஆனால், இந்நிகழ்விற்கு இரண்டரை ஆண்டுகளுக்கு முன்பு ஏழாவது எட்வர்டின் ஆட்சிக் காலத்திலேயே (25 ஜூன், 1909-இலேயே) அவருட்பட பதின்மருக்கு 'இராவ்சாகிப்' பட்டம் பிரிட்டிஷ் ஆளுகைக்கு உட்பட்ட இந்திய அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டிருந்தது. தந்தையின் அரசாட்சியில் அறிவிக்கப்பட்ட கௌரவப்பட்டம் மகனுடைய அரசாட்சியில்தான் பண்டிதரை வந்தடைந்தது. அக்கௌரவப்பட்டத்திற்கான பத்திரமும் (Sanad) தர்பார் பதக்கமும் (Durbar Medal) அப்போது வழங்கப்பட்டன. இருப்பினும் 'இராவ் சாகிப்' பட்டம் அறிவிக்கப்பட்டதிலிருந்தே அது அவரது பெயரோடு இணைந்துகொண்டது.

டில்லி தர்பாரின்போது அவருக்கு அதிகாரப்பூர்வமாக வழங்கப்பட்ட 'இராவ் சாகிப்' பட்டம் குறித்து Somerset Playne என்பவரின் Southern India நூலில் பதிவாகியுள்ள விவரம் பின்வருமாறு:

"By command of his Excellency the Viceroy and Governor-General in Council, this certificate is presented in the name of his Most Gracious Majesty King George V, Emperor of India, on the occasion of his Majesty'' Coronation Durbar at Delhi, to M.R. Ry. Rao Sahib M. Abraham Pandither, Avergal, son of Muthuswami Nadar, in recognition of his public benefactions."


இலண்டனில் அரியணை ஏறிய ஐந்தாம் ஜார்ஜ் மன்னராகி 1911 டிசம்பரில் இந்தியாவிற்கு வருகை புரிந்திருந்தாலும் அதற்கு ஆறு மாதத்திற்கு முன்னமே 'ராஜா வரப்போகிறாராமே! ராஜா வரப்போகிறாராமே!' என்று வாய் ஓயாமல் பேசிக்கொள்ளும் அளவிற்கு மக்களிடத்தில் 'மன்னர் வருகை ஜுரம்' தீவிரமாகப் பரவியது. நாடுதழுவிய கோலாகல விழாவாக மன்னரின் வருகை உருவெடுக்கத் தொடங்கிய காலம் அது. இந்தியாவின் மூலை முடுக்குகளிலிருந்து பலரும் மன்னரது வருகைக்காகவும் முடிசூட்டு வைபவ நிகழ்விற்காகவும் பரபரப்பாக வாழ்த்துப் பாமாலைகளைப் பாடத் தொடங்கிவிட்டனர். மன்னர் வருகைக்கு நெருக்கமான காலத்தில், அதாவது ஒரு மாத காலத்திற்கு முன்பு ஆபிரகாம் பண்டிதரும் ஒரு வாழ்த்துப் பாமாலை பாடினார். அப்பாடல் வெளியான போது 'BY Rao Sahib M. ABRAHAM PANDITHAR' என்று அடைமொழியோடே வெளியாயிற்று.

அன்றைய மெட்ராஸ் மாகாணத்தின் புகழ்பெற்ற பத்திரிகாசிரியர் ஜி. ஏ. நடேசனின் மூத்த சகோதரராகிய ஜி. ஏ. வைத்தியராமனால் நடத்தப்பட்ட 'பிழைக்கும் வழி' என்னும் இதழில் 1911 நவம்பர் மாதம் பண்டிதர் இயற்றிய 'இராஜ கீதம்' வெளியானது. அதற்கடுத்த மாதம் டில்லி மாநகருக்கு வந்து கிரீடதாரணம் செய்துகொள்ளவிருந்த ஜார்ஜ் மன்னரையும் அவரது மனைவி மேரி ராணியையும் தமது தெய்வம் திருவருள் கடாட்சித்துப் பாதுகாக்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்வதாக அக்கீதம் அமைந்தது.

**A SONG OF PRAYER**

**தெய்வப்பிரார்த்தனை கீதம்**

சிறப்புற்றோங்கும் பிரிட்டிஷ் இராஜ்ய பாரந்தாங்கும் மாட்சிமைதங்கிய ஜியார்ஜ் ஐந்தாவது மன்னனும் அவரது பட்டமகிஷி மேரி இராணியவர்களும் இந்தியாவில் டில்லி மாநகரம் வந்து ஏகசக்ராதிபத்திய கிரீடதாரணம் பெறும் சமயத்தில் தமது திருவருள் கடாட்சிக்கத் தெய்வத்தைப் பிரார்த்திக்கும் இராஜகீதம்.


578 பிழைக்கும் வழி. [விரோதிகிருது ஹு கார்த்திகைமீ".

A SONG OF PRAYER.

தெய்வப்பிரார்த்தனை கீதம்.

BY Rao Sahib M. ABRAHAM PANDITHAR.

(:o:)

சிறப்புற்றோங்கும் பிரிட்டிஷ் இராஜ்யபாரந்தாங்கும் மாட்சிமைதங்கிய ஜியார்ஜ் ஐந்தாவது மன்னனும் அவரது பட்டமகிஷி மேரி இராணியவர்களும் இந்தியாவில் டில்லிமாநகரம் வந்து ஏகசக்ராதிபத்திய கிரீடதாரணம் பெறும் சமயத்தில் தமது திருவருள் கடாட்சிக்கத் தெய்வத்தைப் பிரார்த்திக்கும் இராஜகீதம்.

**தீரசங்கராபரணம்** **ஏகதாளம்**

**பல்லவி.**

ஸ்ரீ மா தே வா

திருவருள் புரியஇத் தருணமிங்கு நீயும்வா

**சரணங்கள்.**

1.சிங்கக்கொடி பெற்றிலங்கும் எங்கள் ராஜ்ஜி யம்
சங்கைஜியார்ஜி மன்னன்மகிஷி மேரி அன்னை யும்
மங்களமாய் மாலைசூடி செங்கோல்கைக் கொண்டு
பங்கமின்றி ஆண்டுவரப் பட்டம்சூட்ட வா.

2.வெற்றிவேந்த னாகிவேந்தர் வேந்தனுந்த யை
பெற்றுநீதி இரக்கம்அன்பு பொறுமைஉரி மை
உற்றுச்செங்கோல் பெற்றுலகில் ஒன்றுபோலெம் மை
முற்றுங்காக்கக் கிருபைசெய்ய வேண்டிக்கொள்கி றோம்.

3.மண்ணிற்செல்வம் மேன்மைஆயுள் மக்கட்பேறு டன்
விண்ணின்மணியைப் போலிலங்கி விளங்கும்பேரு டன்
கண்ணின்கரு மணியைப்போல காத்துச்சீரு டன்
எண்ணும்நன்மை யாவுந்தர இரங்கவேண்டி னோம்.

4.காரணனாம் கர்த்தனுந்தன் கருணைபொங்க வே
மாரணஞ்செய் சத்துருக்கள் வர்மம்நீங்க வே
தோரணமோ டெங்கும்வெற்றிக் கொடியும்ஓங்க வே
பூரணாசீர் வாதந்தந்து புவியில்தாங்க வா.

5. ராஜாஎன்றும் வாழ்கவே! நீ டூழிவாழ்க வே!
ராஜவிசு வாசிகளும் மற்றும்யாவ ரும்
பாசமோடு ராஜகீதம் பாடிவாழ்க வே!
தாசர்வேண்டும் தருணம்அருள் தந்துகாக்க வா.

பண்டிதர் இதற்கு முன்னமே (1907-இலேயே) வெளியிட்டிருந்த 'கருணாமிர்த சாகரத்திரட்டு' நூலுள் இடம்பெற்ற பாடலின் பல்லவியை மட்டும் அப்படியே இப்பாடலுக்கும் பல்லவியாகக் கையாண்டுள்ளார். **'திருவருள்புரிய கலியாணத்துக்கு வரும்படி தெய்வத்தை அழைத்தல்'** என்னும் தலைப்பில் அமைந்த அப்பாடல், அனுபல்லவியன்றி 9 சரணங்களோடு சங்கராபரண ராகத்தில் திச்ரசாப்பு தாளத்தில் சாகித்தியம் செய்யப்பட்டிருந்தது. இப்பாடல் அதே ராகத்தில் ஆனால் ஏகதாளத்தில் 5 சரணங்களோடு அமைக்கப்பட்டுள்ளது.

இப்பாடலை வெளியிட்டதோடு மட்டுமின்றி பண்டிதரின் சங்கீத சங்கம் நடத்திய கூட்டங்கள் பற்றியும் பின்னாட்களில் 'பிழைக்கும் வழி' வெளியிட்டது. 1913ஆம் ஆண்டு 19 ஏப்ரல் மற்றும் 9 ஆகஸ்டு ஆகிய நாட்களில் நடைபெற்ற மூன்றாவது மற்றும் நான்காவது சங்கீத கான்பிரன்சுகள் பற்றிய தகவல்களை 'மாஸ வர்த்தமானம்' பகுதியில் வெளியிட்டதும் குறிப்பிடத்தக்கது. ஆனால் பண்டிதர் சூட்டிய பெயரன்றி 'இந்திய சங்கீத சங்கம்' என்னும் பெயரில் வெளியிடப்பட்டன. 1913 ஆகஸ்டு மாத இதழில் 9-ஆம் தேதிய மாஸ வர்த்தமானத்தில்,

இந்திய ஸங்கீத ஸங்கம்.- தஞ்சாவூரில் ராவ் ஸாகிப் எம். அப்ரகாம் பண்டிதரால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் இந்திய ஸங்கீத ஸங்கத்தின் வருஷாந்தரக் கொண்டாட்டம் இன்று நடைபெற்றது. மிஸ்டர் வி.பி. மாதவராவ் ஸி.ஐ.இ., அக்ராஸனம் வகித்தார். அநேக ஸங்கீதவித்வான்கள் வந்திருந்தார்கள். சில வ்யாஸங்கள் வாசிக்கப்பட்டன. ப்ரெஸிடெண்டவர்கள் தமது ப்ரஸங்கத்தில், ஸங்கீதம் தகுந்த ஆதரிப்பு இல்லாமல் இருப்பதைப் பற்றியும், ராவ் ஸாகிப் அப்ரகாம் பண்டிதர் ஸங்கீதவிஷயமாய்ப் பாடுபடுவதைப் பற்றியும் பேசினார். என்று வெளியாகியிருந்தது.

டில்லி தர்பாரின் முடிசூட்டு வைபவத்திற்காகப் பண்டிதர் பாடல் பாடியது ஒருபுறமிருக்க, இலண்டன் மாநகரில் ஐந்தாம் ஜார்ஜ், மன்னனாக மகுடாபிஷேகம் செய்துகொண்டபோது அதன் நினைவாகத் தமது கருணானந்தர் பண்ணையில் ஒரு மகோகனி (MAHAGONY TREE) மரக்கன்றை நட்டு வைத்த வரலாறும் இதனோடு தொடர்புபடுத்தி எண்ணத்தக்கது. இதுபற்றி,

'A mahogany-tree was planted on…..the 22nd of June, 1911, in honour of the Coronation in England of his Imperial Majesty George V, Emperor of India'

என்று சோமர்சட் பிளேயின் பதிவு செய்துள்ளார்.

இப்படி ராஜரீக சம்பந்தமான நிகழ்வுகளில் விருப்பத்தோடு ஈடுபட்டுக் கொண்டிருந்த பண்டிதர் டில்லி தர்பாருக்கு நேரில் சென்றுதான் தனக்கான வெகுமதியைப் பெற்றுக்கொண்டிருப்பார் என்பதை உறுதிபட சொல்வதற்கில்லை. டில்லி தர்பார் நடைபெற்ற அதே நாட்களில்தான் பண்டிதர் வாழ்வில் மிகப்பெரிய துயரச் சம்பவமும் நிகழ்ந்தது. 1911, டிசம்பர் 15ஆம் தேதியன்று புதிய தலைநகராக டில்லி அறிவிக்கப்பட்ட அதே நாளில்தான் பண்டிதரின் முதல் மனைவியும் அவரது சித்த மருத்துவத் தொழிலுக்குப் பேருதவி புரிந்தவருமான ஞானவடிவு பொன்னம்மாள் காலமானார். தர்பார் கூடி முடிவதற்குள் தம் குடும்பத்தில் பேரிழப்பு நேர்ந்துவிட, பண்டிதர் டில்லிக்குச் சென்றிருக்க வாய்ப்பிருந்திருக்காது என்றே தோன்றுகிறது. வெகுமதி வீடு தேடி வந்திருந்தாலும் வீட்டிலிருந்த தன் மனைவியை இழந்த துயரத்தைச் சுமந்து கொண்டுதான் அதனை ஏற்றுக்கொண்டிருப்பார். அவரது வாழ்வில் மகிழ்வும் துயரமும் ஒரே சமயத்தில், ஒருங்கேகூடிவிட்ட பரிதவிப்பின் தருணமாகவே அது அமைந்துவிட்டது என்றே சொல்லவேண்டும்.





# நேம மந்திரதாய கனக

## கீர்த்தனை பொருள் விளக்கம்

பரமன் பணியில் ,
சங்கை. நோவா சாஸ்திரியார்



**இராகம் : ஹரிகாம்போதி** **தாளம் : ஆதி தாளம்**

இயற்றியவர் : சங்கை. வே. எலியா தேவசிகாமணி சாஸ்திரியார். (சங்கை. வேதநாயகம் சாஸ்திரியாருடைய மகன்).

இந்த கீர்த்தனை கிறிஸ்தவத்தில் விரிந்த பரப்பில் அறிமுகமானதா என்று தெரியவில்லை. இங்கு தஞ்சை தமிழ் சுவிசேஷ லுத்தரன் திருச்சபை பெண்கள் கிறிஸ்தவ மேல்நிலைப் பள்ளியில் அக்காலத்தில் இக்கீர்த்தனையை படிப்பித்துக் கொடுத்திருக்கிறார்கள் என்று அறிவேன். அறிந்தோரும் அறியாதோரும் தெரிந்துகொள்ளவும் , இதை பொருளோடு புரிந்து கொள்ளவும் இப்பதிவை எழுதுகிறேன். சங்கை. எலியா தேவசிகாமணி சாஸ்திரியார் அவர்களின் முத்திரையடி பதிந்த கவியையும் இதில் இணைத்து முழுமையான கீர்த்தனைக்கு விளக்க முயன்றிருக்கிறேன்.

**பல்லவி**

நேம மந்திரதாய கனக
நீதி ஞாய ராய தூய
நிகரிலா யேசு ராய
நித்திய மங்களம்

**சரணங்கள்**

1. சாமி சத்திய கோடி மருக
சப்த மங்களம் வேத போத
சமத சுகிர்த கீத நாத
சகஸ்திர மங்களம்.

2. தேவாதி தேவாய
திவிய மங்களம் திரித்துவ நேய
பாவ நாச சர்வ லோக
பரம மங்களம்.

3. ஆசிர்வாத பூசித உசித
அமிர்த வசன சகித சுகித
மேசியா யேசு நாம
விமல மங்களம்.

4. வன்மை சூழ மிருதள இருதய
செம்மை மிகு சவா சுருதிய
நயன புவன கவன திரிதய
நாளும் மங்களம்.

5. எங்கும் இங்கித துங்க மங்களம்
எந்த நாளும் வந்தனம் மங்களம்
சங்கை ராஜ கிறிஸ்து மகுட
சர்வ மங்களம்.

6. ஆரண கல்யாண சுப அனந்த மங்களம்
தினம் தினம் செயம்
பூரண யோக பாக்கிய
புனித மங்களம்

7. சீராக வாழ்க சிநேக
தேவ சிகாமணி சீர் நன்றாக
ஏருலாவும் ஆவை போக
இறைவ மங்களம்.

**சொற்பொருள் :**

நேமம் - நியமம் , முறை , வேர்
மந்திரம் - ஆலோசனை , வேதம்
கனகம் - பொன்
ராயர் - இராயர் - அரசர்
நித்தியம் - அழியாமை , எப்போழ்தும் , நாள்தோறும் , மோட்சம்

மங்களம் - வாழ்த்து
மருக - கணக்கானவர்
சப்த - ஏழு
சப்த மங்களம் - ஏழிசையில் கூறும் வாழ்த்து
சமதம் - பொறுமை
சுகிர்தம் - இன்பம் , சன்மார்க்கம் , தயவு , நன்மை , புண்ணியபலன்
கீத நாதம் - பாட்டிசை , இசைப்பாடல்
சகஸ்திரம் - ஆயிரம்
திவியம் - திவ்வியம் - இனிமையானது , தெய்வீகமானது , மேன்மையானது
நேயம் - அன்பு , நன்மை , உறவு
பூசிதம் - வணக்கம்
உசிதம் - தகுதி , உத்தமம் , அழகு , மேன்மை
அமிர்தம் - இறவாமை , இனிப்பு , பாக்கியம்
சகிதம் - ஒற்றுமை
சுகிதம் - பால் , வெண்மை
விமலம் - அழகு
மிருது - சாந்தம் , மென்மை
சவா(சு) - வியப்பு இடைச் சொல்
சுருதி - இசை , ஒலி (வார்த்தை)
நயனம் - கண்
புவனம் - பூமி , உலகம்
திரிதயம் - மூன்று , திரித்துவம் , மும்மைத்துவம்
இங்கிதம் - இனிமை
துங்கம் - பரிசுத்தம் , உயர்ச்சி , பெருமை
வந்தனம் - அட்டாங்கமாக பணிதல் (சாஷ்டாங்கமாக பணிதல்) , பணிதல்
சங்கை - கனம் , மதிப்பு
ஆரணம் - வேதம்
சுபம் - நன்மை
அனந்தம் - அந்தம் கெட்டது (முடிவு இல்லாதது) , அளவின்மை , கோடாகோடி
யோகம் - உயர்ச்சி , தகுதி , வரம்
சீர் - சிறப்பு , நன்மை , புகழ் , வாழ்வு , செல்வம் , சொல் , செய்யுள்
ஆவு - குறைவு , தாழ்ச்சி
இறை - அரசன் , உயர்ந்தோன் , எப்பொருட்கும் இறைவன் , கடவுள் , மூத்தோன்

**பொருள் விளக்கம் :**

**பல்லவி :**

மேலான வேதமாக , பொன்னாக , நீதியாக , நேர்மையாக , அரசராக , பரிசுத்தராக , எவருக்கும் எவற்றுக்கும் ஒப்பில்லாத இயேசு ராஜனுக்கு என்றென்றும் அழியாத நீடித்த வாழ்த்துகள்.

**அனுபல்லவி :**

1. கடவுளின் கோடிக்கணக்கான உண்மை பக்தர்கள் , ஏழிசை வழியாக கூறும் வாழ்த்துகள். வேதத்தைப் போதித்த பொறுமை நிறைந்த பரம நன்மை அருள்பவர்க்கு ஆயிரமாயிரம் துதி பாடல்களினால் வாழ்த்துகள்.

( ஏழிசை என்பது : தூ 1. தமிழ் இசையில் குரல் , துத்தம் , கைக்கிளை , உழை , இளி , விளரி , தாரம்.

2. கர்நாடக இசையில் ஸட்ஜமம் , ரிஷபம் , காந்தாரம் , மத்யமம் , பஞ்சமம் , தைவதம் , நிஷாதம் - ஸ ரி க ம ப த நி.)

2. தேவாதி தேவனாக இருப்பவருக்கு மேன்மை மிகு வாழ்த்துகள். மும்மைத் தன்மை கொண்ட அன்புடையவர் , பாவத்தை அழித்தவர் , அனைத்துலகுக்கும் கடவுளான அவருக்கு வாழ்த்துகள்.

3. ஆசிர்வாதங்களைக்கொண்டிருக்கும் வணங்க தகுதியுடையவருக்கும் , இனிமையும் அழியாமையான வார்த்தையானவருக்கும் , ஐக்கியம் கொள்ளச் செய்பவராகிய வெண்மை மிகு தூய மேசியாவாகிய மீட்பர் இயேசு என்ற திருப்பெயர் கொண்ட அழகனுக்கும் வாழ்த்துகள்.

4. வலிமை மிக்கவரும் இரக்க உள்ளம் கொண்டவரும் அழகு நிறைந்தவரும் பிதாவின் ஒரே தன்மையுடையவரும் , ஒலியாக கண்ணாக உலகை கண்டு கவனித்து அறிகிற திரியேக கடவுளுக்கு தினம் தினம் வாழ்த்துகள்.

5. எங்கும் இனிய பரசுத்தருக்கு வாழ்த்துகள். எல்லா நாளும் பணிந்து வணங்கி வாழ்த்துகிறொம். பெருமை மிகுந்த ராஜாவாகிய கிறிஸ்துவுக்கு உச்சிதமான எல்லா வாழ்த்துகளும் உண்டாகட்டும்.


6. திருச்சபையாகிய தலைவியை மணம் செய்யும் தலைவராகிய கிறிஸ்துவுக்கு நன்மையுண்டாக கோடான கோடி வாழ்த்துகள். தினம் தினம் வெற்றி நிறைய பெற தகுதியுள்ள பேறுபெற்றவருக்கு பரிசுத்தமான வாழ்த்துகள்.

7. அன்புடைய தேவசிகாமணி சிறப்பாக வாழ்வதற்கு , நன்மை உண்டாகவும் வளம் பெறவும் குறைகள் நீங்கி நிறைவு பெருக அருள் செய்யும் கடவுளுக்கு வாழ்த்துகள்.

# வேதநாயகம் சாஸ்திரியார் முத்ரையடி விளக்கம்

பரமன் பணியில் ,
சங்கை. நோவா சாஸ்திரியார்

## *வே.சா. , முத்திரையடி 10.*
## ஜெபமாலை 6. கவி 13.




**தேவலட்சணம்** **ஆசிரிய விருத்தம்**

'காலமே வா மிகத் தாமதஞ் செய்யாது
கடுசீக்கிரம் விரைவாக வா
கவனமாய்ச் செய்திகள் எலாத்தையுங் கேள் உனது
காது சாய்த்து உறுதியாய்க் கேள்
வேலையில் என் அலுவலாய் நில்லு, பத்திரமாய் என்
வீட்டை முழுதுங் காத்திரு
வெளியில் நான் போகையில் கூடவா, மீள்கின்ற
வேளையும் எனைப் பின்தொடர்
சோலி வைக்காது எனக்கு ஆகவேண்டியது எலாஞ்
சுறுசுறுப்புடன் உடனே செய்
தூங்காது இராப்பகற் கண்விழிப்பாய் நின்று
சொன்னபடி யெல்லாம் நட
சாலவே வேதநாயகனை உன் கவி யென்று
சகல பேர்க்குஞ் சொல்லிவை
தாதையாகிய வஸ்து வேதமாளிகை ரஸ்து
சாமி யேசுக் கறிஸ்துவே .'

**முன் விளக்கம் :**

கடவுளை பக்தி நெறியில் போற்றுதல், பரவுதல் என்பது மனித இயல்பு. இங்கே சாஸ்திரியார் இக்கவியில் கடவுளுக்கு கட்டளை இடும் முறையில் அதாவது வா , கேள் , நில் , இரு , செய் , நட என பாடியிருப்பது பக்தியின் ஒரு நிலையை எடுத்துக்காட்டுவதாக அமைந்திருக்கிறது. பக்தியை நான்குபெரும் வகைகளாக பகுத்து அறிவர். திருமறையில் வரும் நிகழ்வுகள் அடிப்படையிலும் நாம் அதை உணரலாம். நான்கு வகைகள் (முறைகள்) :

1. நன் மார்க்கம் - சன்மார்க்கம் அதாவது எல்லாம் கடந்து நிற்கும் உயரிய நிலை , எல்லாம் வல்ல கடவுளாய் நோக்குவது (பண்பில் , குணத்தில் , செயலில்.)
2. சக மார்க்கம் - இது தனக்குச் சமமாக வைத்து பார்ப்பது. நட்பு , உறவு என்ற முறையில். (உ- ம்.) கிறிஸ்து - மணவாளன், திருச்சபை - மணவாட்டி.
3. புத்திர மார்க்கம் - மகனாக மகளாக நினைத்து தன்னிலும் சிறியவராக , தன் உரிமைக்கு உட்பட்டவராக வைத்து பார்க்கும் நிலை.
4. தாத மார்க்கம் - அடிமை நெறி - அதாவது தனக்குக் கீழ்ப்பட்டவராக வைத்து அடிமையாக , வேலையாளாக பார்ப்பது.

**கிறிஸ்தவ நம்பிக்கைக் கொண்டோர் ;**

இது திருமறைக்கு எதிரானது , விரோதமானது என்று நினைப்பீர்கள். ஏனென்றால் நாம் இறைப்பற்றில் வளர்ந்த உயர்ந்த நிலை அதுமட்டுமே. அதைக் கடந்தும் நாம் அனைவரும் முன்னேற வேண்டிய தருணங்கள் உண்டென்பதையும் திருமறை பாத்திரங்கள் , நிகழ்வுகள் வழி அறியலாம். ஆதாம் தொடங்கி ஆபிரகாம் , யாக்கோபு , மோசேயை குறித்துப் பார்க்கும்போது , ஒரு மனிதனோடு பேசுவது போல் கடவுளோடு பேசினார்கள் என்பதை அறிவோம். யோனா , எலியா , தாவீது இவர்களின் செயல்கள் , கடவுளை தங்களுக்கு இணையானவராக , தோழராக , சகமனிதராக அண்டினார்கள் என்பதை அறிவோம். மகிமை பொருந்திய கடவுள் என்பதில்

மாற்று இல்லை , ஆனால் சில நேரங்களில் அவர்களின் இறைப்பற்று - நெருக்கம் - பக்தியின் உச்சம் இதுபோன்ற உறவுநிலையை ஏற்படுத்துகிறது.

தமிழ் இலக்கியங்களிலும் பல சான்றுகள் உண்டு. பக்தி என்பது சமயம் - மொழி - இனம் - நிறம் - நாடு கடந்தது. பாரதியாரை அறிவோம்; அவருடைய படைப்பில் 'கண்ணன் பாட்டு' என்ற பகுதியில் 'கண்ணன் என் சேவகன் ' எனும் பாடல் உண்டு. அந்த பாடலை ஒப்பு நோக்குவது எந்த சமய பக்திக்கும் பொதுவானது என்பதை காட்டும்.

ஜெபமாலைக்கு உரை கண்டவரும் திறனாய்வு செய்தவருமாகிய ' தமிழ் மாமணி ' தஞ்சை மறைதிரு. சி. வி. சவரிமுத்து அடிகளார் ஜெபமாலை நூலுக்கு பெரும் விளக்கத்தையும் ஆழ்ந்த சிந்தனைகளையும் கருத்துகளையும் எழுதி வெளிப்படுத்தியுள்ளார். இந்த ஜெபமாலையில் கடவுளுக்கு சாஸ்திரியார் கட்டளை இடுகிறாரே என்று எண்ணினவர், திருமறை ஆதாரமாக, ஏசாயா 45 : 11 - ஆம் திருவார்த்தையை கூறி பதிவு செய்துள்ளது சிறப்புக்குரியது.

' தேவலட்சணம் ' என்றதற்கு பொருள் கூறுவது நீண்டு செல்லும் என்பதாலும் இறைக் கோட்பாடுகள் அதன் வகைகள் புரிதலுக்கு கடினமுள்ளது என்றும் உணர்ந்து ; பாடலின் பொருள் விளக்கத்திற்குள் செல்கிறேன்.

**சொற்பொருள் (வே.சா.) :**

சோலி - தொந்தரை - தொந்தரவு, வருத்தம்

சுறுசுறுப்பு - விரைவு

**சொற்பொருள் (பொது) :**

மீள்கின்ற - திரும்புகின்ற

தாதை - தந்தை , பாட்டன்

வஸ்து - பொருள்

தாதையாகிய வஸ்து - தந்தையாகிய மெய்ப்பொருள்

மாளிகை - அரண்மனை , வீடு , பெரும்வீடு , கோயில்.

ரஸ்து - சரக்கு , சாமான் (நூலிலி வி) , ( பொருட்களின் கூட்டுத் தொகுப்பு)

**பொருள் விளக்கம் :**

அதிகாலையில் வா, மிகவும் தாமதம் செய்யாது, மிக சீக்கிரமாக விரைவாக வா. சொல்லும் செய்திகளை (கட்டளைகளை , வேலைகளை) எல்லாம் கவனமாய் கேள் , உனது காதை சாய்த்து உறுதியாய் கேள். வேலையின் போது என் வேலையாய் (துணையாய்) நில் , என் வீடு முழுவதையும் பத்திரமாக காத்துக்கொள். வெளியில் நான் சென்றால் என்னுடன் கூடவா , போய் திரும்புகையிலும் என்னை பின்தொடர்ந்து வா. எனக்கு தொந்தரவு நேராதபடி எனக்குச் செய்ய வேண்டியது எல்லாம் சுறுசுறுப்புடன் அதையும் உடனே செய். இரவு பகல் தூங்காது கண்விழித்திருந்து சொன்னபடியெல்லாம் செய். பெருமைமிகு வேதநாயகனை உன் கவிஞன் என்று உலகம் அனைத்திற்கும் சொல்லிவை. தந்தையாகிய பரம்பொருளே , திருமறை மாளிகையில் வைக்கப்பட்டுள்ள மெய்ப்பொருளாகிய சாமி , இயேசு கிறிஸ்துவே.

***கிளமெண்ட் வேதநாயகம் சாஸ்திரியார்***

**நெல்லையானும் தஞ்சை சுவிசேட கவிராயருமான சங்கை வேதநாயக சாஸ்திரியார், கிறித்தவ உலகத்திற்கு இறைவன் தந்த ஒரு மாபெரும் ஈவு. இதை ஒவ்வொரு தமிழ் கிறித்தவரும் உணரவேண்டும். வேதநாயக சாஸ்திரியாருடைய முக்கியத்துவத்தை உணராத பட்சத்தில் நாம் தேவனுக்கு நன்றியற்றவர்களாவோம். மாத்திரமல்ல கிறித்தவத்துக்கும் தமிழுக்கும் எந்த சம்மந்தம் இல்லையென்று உலகம் பேசலாகும். வேதநாயக சாஸ்திரியாரின் இலக்கியப்படைபின் பெருமையையும் அவருடைய பாடல் அழகின் ஆழத்தை அறிந்த அவர் வழிவந்த மக்களும் தமிழ் ஆர்வலர்களும் வருகின்ற செப்டம்பர் மாதம் 6 மற்றும் 7 தேதிகளில் அவருடைய இருநூற்று ஐம்பதாவது பிறந்த ஆண்டை முன்னிட்டு பற்பல முக்கிய நிகழ்வை நடத்த எத்தனித்துள்ளார்கள். இந்நிகழ்வில் அடியேனும் பங்கு வகிக்க தேவன் அருள் புரிந்தார். இதில் பங்பெருகிற யாவரையும் நான் இயேசு கிறித்துவின் நாமத்தில் வாழ்த்துகிறேன். வேதநாயக சாஸ்திரியாரின் படைப்பின் புகழ் பரவட்டும் அதின் மூலமாய் தேவனுடைய நாமம் மகிமைப்படட்டும். இந்நிகழ்ச்சிக்கு பலர் ஜெபித்து, உழைத்து, கொடுத்து வருகிறார்கள். அவர்கள் யாவருக்கும் என் நன்றி உரித்தாகுக. கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.**



இருநூற்றைம்பதாவது பிறந்தநாள் விழா
250
1774 - 1864
வேதநாயகம்
சாஸ்திரியார்
தஞ்சை • செப்டம்பர் • 2024
கொண்டாட்டங்கள்




# தஞ்சை வேதநாயகம் சாத்திரியாரின் கீர்த்தனைகளில் சிலுவைக்காட்சி

ஷீலா கே.ஜி. நரசிம்மன்

சாத்திரியார் அவர்கள் இயேசுகிறிஸ்துவே தன் ஆன்ம ஈடேற்றத்திற்கு இப்பூவுலகில் மானிடனாக வந்து சிலுவைப் பாடுகளின் வாயிலாக மனுமக்களுக்குக் காட்டிய அன்பை நினைத்துத் தன்னையே முழுவதும அர்ப்பணித்துப் பாடிய கீர்த்தனைகளானதால் அவைகளில் அவர் ஆண்டவரின்பால் வைத்த மாறாத அன்பை வெளிப்படுத்துதலைக் காணலாம்.

கிறிஸ்துவ கீர்த்தனைகளில் மிக அதிகமான பாடல்கள் சாத்திரியாரின் பாடல்களே ஆகும். அவைகள் இந்நாளளவும் திருச்சபை ஆராதனைகளில் மக்களால் பக்திப் பரவசமுடன் பாடப்பட்டு வருகின்றன. அவைகளில் எட்டுப் பாடல்கள் கிறிஸ்துவின் பாடு மரணத்தைப்பற்றியன. இப்பாட்டுக்களின் கருத்தாழத்தை உணர்ந்து ஒருவன் பாடுவானாகில் அவன் உண்மையிலேயே தன்னை முழுவதுமாக அர்ப்பணித்து தன் அபாத்திர தன்மையையுணர்ந்து தன் பாவங்களை நினைத்து கசிந்து கண்ணீர் உகுத்து கிறிஸ்துவே தன்னை மீட்க வந்த இரட்சகர் என ஏற்றுக்கொள்வான். இயேசு கிறிஸ்து. பாவிகளுக்கு அளித்த கிருபை புதுவிதமானது. இது இவ்வுலகில் இதற்கு முன்னும் இனிமேலும் யாரும், யாருக்கும் செய்திராத, செய்ய முடியாத தியாகமாகும். ஒருவன் செய்த குற்றங்களுக்குப் பதிலாக அவனைத் தண்டிக்காமல் “அவர் நாண நன்னயம் செய்துவிடல்“ என்னும் குறள் கூறுவது போல பாவிகள் நானும்படியாக தனக்குத்தானே தண்டனையைத் தந்து கொண்டார். இந்த நன்னயம் கண்டு பாவிதானே நாண வேண்டியதாயிற்று. பாவியின் இந்த நாணத்தைப் பிரதிபலித்துப் புலம்பும் பக்தனின் புலம்பலே அருள்நிறைந்த புலம்பல். கல்வாரியின் சிலுவைப்பாடுகள் சாத்திரியாரை உலுக்கிவிட்டன. உருகிப் பாடுகின்றார்.

**“ஆத்தும் நாயகனை யிழந்தேனே**
**பிரலாப சமுத்திரத்தில் விழுந்தோன் (தியானப் புலம்பல்)**

கிறிஸ்துவின் பாடுகள் கடலளவு துயரத்தைத் தருகின்றன. அவர்பால் கொண்ட பக்தருக்கு. விண்ணரசர் இயேசு மண்ணில் வந்து உயிர் விட்டாரே என்பது ஒரு புலம்பல். இப்புலம்பலில் சீயோனின் மாது ஆண்டவரை நோக்கிக் கேட்கும் கேள்விகளும் அவற்றிற்கு அவர் கூறும் பதில்களும் என்ற விதத்தில் அமைகிறது பாடல்.

**’பொற்பு மிகு வானுலகும்**
**பூவுலகும் படைத்த பரப்பொருளே - இங்கே**
**பொந்திப்பிலாத் தரண்மனையில்**
**வந்து நிற்கும் காரணமேன், கோவே?“**
**இதற்குக் கிறிஸ்து கூறும் பதில்**
**’கற்பனை மீறிய பவத்தால்**
**கடின நரகாக்கினைப் படாமல் - உன்னைக்**
**காப்பதற்கிங்கே ஞாயத்**
**தீர்ப்பில் உற்றோம், சீயோனின் மாதே’ (கீர்த்தனை 48)**

இப்பாடலில் மனிதனை மீட்கும் பொருட்டு அவனை நரக ஆக்கினையின் கோரப்பிடியிலிருந்து மீட்டு தன் பிள்ளையாக அவனை மாற்ற வேண்டும் என்பதினாலேயே விண்ணரசிலிருந்து இறங்கி மண்ணுலகில் வந்து நியாயத்தீர்ப்பில் உற்றோம் என்று சாத்திரியார் பாடுவது அவரின் ஆழ்ந்த பற்றையும் அன்பையும் வெளிப்படுத்துகிறது.

**'வாருங்கள் தொடர்ந்து வாருங்கள், கொல்கதா பாதையிற் கோதையரே'** என்ற கீர்த்தனையின் சரணம் 3-ல்

**திருமுக அருள் ஒன்றும் தெரியா தடைந்ததே**
**செங்குருதிகளெல்லாம் பொங்கி வடிந்ததே**
**சருவ வல்லபம் குன்றித்திரையும் நிறைந்ததே**
**ஜகமும் பரமுந் துக்க சாகரத்தழுந்துதே.**

இயேசு கிறிஸ்து சிலுவையில் தொங்குகிறார். செங்குருதிகள் எல்லாம் பொங்கிவடிந்து திருமுக அருள் தெரியாவண்ணம் அடைந்தது. அதனால் இந்தப் பூவுலகமும் அதிலுள்ளவைகளும் வானுலகமும் துக்க சாகரத்தில் அழுந்திக்கொண்டிருக்கிறது என்று அவர் பாடுவது எத்துணை ஆழ்ந்த கருத்துக்களைத் தன்னுள் கொண்டுள்ளது என்பது தெளிவாகத் தெரிகிறது. அவரின் சிலுவைப் பாடுகள் சாதாரண துக்கமல்ல. ஜகமும் பரமும் துக்க சாகரத்திலேயே மூழ்கிக்கொண்டிருக்கிறது என்ற துக்கத்தின் உச்ச நிலையை எடுத்துக் காட்டுகிறது.

சாத்திரியார் பாவியில் பாவியாகிய தன் பொருட்டு இயேசு கிறிஸ்து ஜீவன் விட்டாரோ என்ற கேள்விக்குறியோடு அமைந்துள்ள அருமையான பாடல் ஆனந்த பைரவி ராகத்தில் அமைந்துள்ளது.

**'என்னாலே ஜீவன் விடுத்தீரோ - ஸ்வாமி?**
**இத்தனை பாட்டுங்கிங்கே அடுத்தீரோ?' (கீர்த்தனை 56)**

பல்லவியில் கேள்வியையும் கேட்டு அதற்குப் பதிலை சரணத்திலே அமைத்துக் கொடுக்கும் பாங்கு மிக்க அருமையானது. இதோ சரணம்

**'சிலுவை மரத்தில் கைகால் நீட்டி - தேவரீர்**
**திருவிலாவைத் துளைக்க ஈட்டி, காயம்**
**வலிய அன்பின் கடைக்கண் காட்டி,- இன்னம்**
**வரவழைக்கிறீர் தயை பாராட்டி;**
**விலைகொடுத்தெனைக் கூட்டி, மிக்க சலாக்யம்**
**சூட்டி, மீண்டவாறிது மிக்க விசாலமே**
**ஆண்டவா, அது பக்கிஷ நேசமே-**

என்று சாத்திரியார் அவர்கள் சொற்சுவை, பொருட்சுவை நிறைந்து பாடியுள்ளார். இப்பாடல் அவரது உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து பெருக்கெடுத்தோடும் நன்றி 'பிரவாகத்தின் வெள்ளமே. எனவேதான்

**'மீண்டவாறிது மிக்க விலாசமே**
**ஆண்டவா, அது பக்கிஷ (பட்சமுள்ள) நேசமே'**

என உள்ளமுருகி பாடியுள்ளார்.

சாத்திரியார் இயற்றியுள்ள கீர்த்தனைகளிலே சிலுவைக்காட்சிக்கு முதன்மையான இடத்தையும் மேலான இடத்தையும் கொடுத்து, பாடுவோர் கேட்போர் உள்ளங்களை இறைவன் இயேசுவின்பால் திருப்பச் செய்து அவரையே மீட்பராக ஏற்றுக்கொள்ளச் செய்துள்ள சேவை போற்றற்கரியது.


கிறிஸ்தவ
# வரலாற்றுச் சுவடுகள்

மாத ஆய்விதழ் சந்தா விபரம்

| சந்தா விபரம் | உள்நாடு |
|---|---|
| தனிப்பிரதி | ₹ 60 + நன்கொடை |
| ஆண்டு சந்தா | ₹ 600 + நன்கொடை |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹ 3000 + நன்கொடை |

வங்கி விபரம்

Name: Christian Historical Society
A/c Number : 1748 020000 4906
Bank name : Federal Bank
IFSC code: FDRL0001748

"கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்"
மாத ஆய்விதழை நீங்கள்
தொடர்ந்து பெற்றுக் கொள்ள
G-Pay மூலம் நன்கொடை செலுத்த
91767 80001 என்ற எண்ணுக்கு செலுத்தவும்
காசோலை மற்றும் வரைவோலை செலுத்த
'கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்'
( Christian Historical Society )
என்ற பெயரில் எடுக்கவும்

ஆசிரியர்

கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,
கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,
பங்களாச் சுரண்டை-627859,
தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)
04633 290401, 91767 80001

christianhistoricalsociety.in
tchsportal.co.in
christianhistorical@gmail.com




சங்கை வேதநாயகம் சாஸ்திரியார் 250 ஆவது பிறந்த தின நினைவு விழா



சங்கை வேதநாயகம் சாஸ்திரியார் 250 ஆவது பிறந்த தின நினைவு விழா

# சங்க பணிகளுக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்

**கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கத்தின் அன்பின் வாழ்த்துக்கள்.**

பூர்வ நாட்களை நினை; தலைமுறை தலைமுறையாய்ச் சென்ற வருஷங்களைச் கவனித்துப்பார்; உன் தகப்பனைக் கேள், அவன் உனக்கு அறிவிப்பான், உன் மூப்பர்களைக் கேள், அவர்கள் உனக்குச் சொல்லுவார்கள். உபாகமம் 32.7

ஒருங்கிணைந்த திருநெல்வேலி திருச்சபை உருவாகி சுமார் இரண்டரை நூற்றாண்டுகளாகின்றன. பராபரனின் பெரிதான கிருபையினால் இன்று திருமண்டலங்களாகவும், பல நூறு திருச்சபைகளாகவும் பெருகி வந்து கொண்டு இருக்கின்றது. பராபரனுக்கு ஸ்தோத்திரம். திருச்சபை சரித்திரத்தை அறிய வேண்டிய அவாவும் மக்கள் மனதில் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றது. இந்நிலையில் **'யார் நமது காரியமாய் போவான்,' இதோ அடியேன் இருக்கின்றேன், என்னை அனுப்பும்'** என்று ஏசாயா தீர்க்கன் முன் வந்தது போல திருநெல்வேலி வரலாற்றை மீள் பதிப்பு செய்யவும், வரலாற்று பணிகளை கள ஆய்வுப் மேற்கொள்ளவும், நின்றுபோன வரலாற்று **'தொடரோட்டத்தை தொடரவும்'** கடவுளால் தெரிந்துகொள்ளப்பட்ட இயக்கமே **' கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்'**

**கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்** தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்கள் பலரின் அரும்பெரும் முயற்சியினால் தொடங்கப்பட்டது. நம்முடைய வரலாற்றுச் சங்கத்தின் தரிசனத்தில், இறையியல் கல்லூரி மாணவர்கள் பலர் தன்னார்வத்தோடு தங்களையும் இணைத்து செயல்பட்டு வருகிறார்கள். மேலும் தமிழ்நாடு முழுவதும் உள்ள பல வரலாற்று ஆய்வாளர்களுடன் கைகோர்த்து இப்பணியைச் செய்து வருகின்றோம்.

வரலாற்றுச் சங்கமானது கடந்த ஐந்து ஆண்டுகளாக உங்களுடைய ஜெபத்தினாலும் பேராதரவினாலும், மிகச்சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. நமது பத்து அம்ச திட்டங்களில் மாத ஆய்விதழ், பழைய புத்தகங்கள் சேகரித்தல் மற்றும் டிஜிட்டல் செய்யும் பணி, புத்தக மறுப்பதிப்பு பணிகள், நூலகப் பணிகள், மிஷன் சுற்றுப்பயணம், புத்தக வனம் இணைய செயலி, ஆவணப்படம் தயாரித்தல், மிஷன் அருங்காட்சியகம், ஆய்வுக் கருத்தரங்கம் போன்ற பணிகளை கடந்த ஆண்டுகளில் செய்து வருகின்றதை நீங்கள் அறிந்ததே.

இந்த ஆண்டிலும் வரும் ஆண்டுகளிலும் நமது இலக்குகளை அதிகப்படுத்தி இருக்கின்றோம். குறிப்பாக **புத்தக மறுப்பதிப்பு, நூலக கட்டிட பணிகள், மிஷன் அருங்காட்சியகம்** மேற்கண்ட பணிகளை செய்ய வேண்டிய தேவையில் இருக்கின்றோம். இப்பணிகளில் நீங்கள் குடும்பமாகவோ, இயக்கமாகவோ அல்லது தனி நபராகவோ இணைந்து செயல்படவும் பங்கு பெறவும் அன்புடன் அழைக்கின்றோம்.

**நம் சங்கத்தின் பத்து அம்ச செயல்திட்டத்தை நினைவுபடுத்துகின்றோம்:-**

தமிழ் கிறிஸ்தவ வரலாற்றில் நீண்ட இடைவெளிக்கு பின்பு மீண்டும் ஒரு வரலாறு படைத்துக் கொண்டு இருக்கும் மாத ஆய்விதழ் தான் **'கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்'**. கடந்த 2020ம் ஆண்டு ஜூன் மாதம் முதல் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு தலைப்பைக் கொண்டு பல்வேறு அரிய ஆய்வுக் கட்டுரைகளோடு மிக சிறப்பாக வெளி வந்து கொண்டிருக்கிறது. **மறைக்கப்பட்ட, மறந்த, மறைந்த** மிஷனெரிகள் மற்றும் திருச்சபை வரலாறுகள், கள ஆய்வுகள், பல்வேறு அரிய வரலாற்று பொக்கிஷங்களுடன் தமிழகம் முழுவதும் தொடர்ந்து 1530 க்கு மேற்பட்ட வாசகர்களுடன் வந்து கொண்டு இருக்கின்றது.

- காலவோட்டத்தில் அறுபட்டுக்கிடந்த இசைத் தமிழ் கண்ணிகளைத் தற்கால இசைத் தமிழ் உலகுக்குக் கோர்த்துக் கொடுத்த மாபெரும் இசைத் தமிழ் அறிஞர் தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் அவருடைய அளப்பரிய செயல்களை நினைவுகூறும் வகையில் **ஆபிரகாம் பண்டிதர் நினைவு மின்னனு ஆராய்ச்சி நூலகம்** நம்முடைய சங்கத்தின் சார்பில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆபிரகாம் பண்டிதர் நினைவு ஆராய்ச்சி நூலகமானது தமிழ் கிறிஸ்தவ மின்னனு நூலகத்தில் **முதல் நூலகம்** என்ற சிறப்பைப் பெற்றது. இந்த நூலகமானது தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும், தமிழ் கிறிஸ்தவ ஆராய்ச்சி மாணவர்களுக்கும் பயன்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ் கிறிஸ்தவ வரலாற்றில் ஒரு புதிய மைல் கல்லாகவும் அமையும். மேலும் அநேக புதிய தமிழ் கிறிஸ்தவ எழுத்தாளர்களை உருவாக்கவும், ஆராய்ச்சியாளர்களை உருவாக்கவும் இது உதவியாக இருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.
- வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த, மறுபதிப்பு செய்து வெளியிடப்படாத கிறிஸ்தவ மிஷனெரிகளின் வாழ்க்கை வரலாறு புத்தகங்களை மறுபதிப்பு செய்து வருகின்றோம். குறிப்பாக நெல்லை திருமண்டல வரலாற்று அறிஞர் பேராசிரியர் அருள்திரு **தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர்** அவர்களுடைய படைப்புகளை மறுபதிப்பு செய்து இன்றைய தலைமுறைகளுக்கு கொண்டு செல்லவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றோம். குறிப்பாக கடந்த ஆண்டு பேராசிரியர் அருள்திரு தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர் அவர்களின் வரலாற்று சிறப்புமிக்க புத்தகம் அனைத்தையும் மறுபதிப்பு செய்து வருகின்றோம்.

- நம்முடைய வரலாற்று சங்கமும் கிறிஸ்தவ ஆய்வு மற்றும் ஆவணப்படுத்து மையமும் இணைந்து **'புத்தக வனம்'** செயலி செயல்பட்டுக் கொண்டு இருக்கின்றது. இந்த செயலி தமிழகத்தில் முதல் முறையாக டிஜிட்டல் முறையில் கையடக்க வடிவில் புத்தகமாக முழு நூலகமாக உங்கள் கைகளில் கொடுத்துள்ளோம். இன்னும் பல ஆயிரம் புத்தகங்களை பதிவேற்றும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மேலும் பேராசிரியர் அருள்திரு தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர் பெயரிலேயே **நினைவு புத்தக அங்காடி** ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- தமிழக வரலாற்றில் கிறிஸ்தவ மிஷனெரிகளுடைய பங்கு குறிப்பிடத்தக்கது. அந்த மிஷனெரிகள் பணி செய்த இடங்கள், அவர்களுடைய நினைவிடங்கள், தங்கியிருந்த இல்லங்கள், கல்லறைகள், வரலாற்று சிறப்புமிக்க ஆலயங்கள், இரத்த சாட்சிகளாக மரித்த மிஷனெரிகள் பணி செய்த மற்றும் தங்களை இரத்த சாட்சியாக ஒப்புக்கொடுத்த இடங்களை தெளிவான முறையில் பார்வையிடவும், வெளியிடங்களிலிருந்து வரும் மக்களின் வசதிக்காகவும் **Mission Tourist Map** என்று செயலி உருவாக்கி அதன் மூலம் அவர்கள் தங்குமிடங்கள், வழித்தடங்கள் அடங்கிய மின்னியல் கையேடு அமைப்பது.
- வரலாற்றின் பக்கங்களில் மறைந்து கிடக்கும் கீர்த்தனை கவிஞர்கள், உபதேசிமார்கள், முன்னாள் குருமார்களுடைய வரலாற்று பொக்கிஷங்களை சேகரித்து வருகிறோம். மேலும் அவர்களுடைய வரலாற்றுத் தகவல்கள், அவர்களால் உருவாக்கப்பட்ட திருச்சபைகள், கிறிஸ்தவ பாடல்கள் உருவாக்கம் பெற்ற வரலாறுகள், பாடல்களின் வரலாறுகளையும் சேகரித்து அதை மின்னியல் முறைக்கு மாற்றும் பணிகளையும் செய்து கொண்டு இருக்கின்றோம்.
- தமிழ் கிறிஸ்தவ பழைய புத்தகங்களை சேகரித்து மின்னியல் முறையில் ஆபிரகாம் பண்டிதர் நினைவு ஆராய்ச்சி நூலகத்திலும், பேராசிரியர் **அருள்திரு தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர் நினைவு புத்தக அங்காடி**யிலும் பதிவேற்றம் செய்வதுடன் புத்தகங்களை தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும், ஆராய்ச்சி மாணவர்களுக்கும் பயன்படும் விதமாக ஒரு சிறந்த ஆய்வு நூலகம் அமைக்கவும் முயற்சிகளும் மேற்கொண்டு வருகிறோம்.
- மிஷனெரிகளின் வாழ்க்கை வரலாற்று சம்பவங்களை அடிப்படையாக கொண்டு ஆவணப்படங்களை வெளியிடுவதற்கான முயற்சிகள் செய்து கொண்டு இருக்கிறோம். கர்த்தருக்கு சித்தமானால், வருகிற ஆண்டு **கிளாரிந்தா, ஏமி கார்மைக்கேல்** மிஷனெரிகளின் வரலாற்றை ஆவணப்படமாக்க திட்டமிட்டிருக்கிறோம்.
- தங்களுடைய வசதியான வாழ்வை தியாகம் செய்து நம் நாட்டிற்கு வந்து கோதுமை மணிகளாய் விதைக்கப்பட்ட மிஷனெரிகள் மற்றும் தன் சொந்த மக்களுக்காக தங்களையே அர்ப்பணித்த நம் இந்திய மிஷனெரிகளின் நினைவிடங்கள் மற்றும் கல்லறைகளை கண்டறிவதுடன் திருச்சபையுடன் இணைந்து பராமரித்து அவர்களுடைய தியாகங்களை குறித்த விழிப்புணர்வை திருச்சபை மக்களுக்கு ஏற்படுத்த பணியாற்றி வருகிறோம்.
- வரலாற்றுச் சங்கம் சார்பில் மிஷனெரிகள் பயன்படுத்திய கலை பொருட்கள் மற்றும் புத்தகங்கள், பைபிள், சேகரித்து வரலாற்று **அருங்காட்சியகம்** அமைக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறோம். மிஷனெரிகள் பயன்படுத்திய பொருட்களை சேகரித்து வருகிறோம்.
- கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் மற்றும் மேய்ப்பரின் பயிலகம் சார்பாக கடந்த இரண்டு மாதமாக இணையதள **சீர்திருத்த தமிழ் திருச்சபையின் ஆரம்பங்கள்** என்ற தலைப்பில் ஒவ்வொரு மாதமும் இரண்டாவது செவ்வாய்கிழமைகளில் இரவு ஏழு முப்பது மணிக்கு நடைபெற்று வருகின்றன.

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, கடந்த 2017ம் ஆண்டு அற்பமாக ஆரம்பிக்கப்பட்ட நம்முடைய திருநெல்வேலி **கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்** இது வரையிலும் பல்வேறு தடைகளையும், நெருக்கடிகளையும் கடந்து வந்திருக்கிறது. வரலாற்று ஆய்வாளர்கள், ஆசிரியர்கள், வாசகர்கள், நண்பர்கள், நலன் விரும்பிகள் ஆகியோருடைய இடைவிடா ஜெபத்தாலும், ஆதரவாலும், உதவியாலும் நம் திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. மேலும் நம்முடைய மாதாந்திர ஆய்விதழும் தடைகளின்றி வெளி வருகிறது. நம்முடைய கிறிஸ்தவ வரலாற்றுச் சங்க செயல்பாடுகள் சிறப்பாக அமைய ஜெபத்தாலும், உடலுழைப்பாலும், பொருளாதார வழியிலும் உதவி வரும் அத்துணை நல்லுள்ளங்களுக்கும் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம். தொடர்ந்து நாம் செயல்பட வேண்டிய தளங்கள் அநேகமுண்டு. இணைந்து செயல்பட அன்புடன் அழைக்கிறோம். வரலாற்றுச் சங்கத்தின் ஓர் அங்கமாக வரலாற்றை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லும் கருவியாவோம். சர்வ வல்லமை கொண்ட ஆண்டவரின் ஆயுதமாவோம்.

christianhistoricalsociety.in/
tchsportal.co.in




Yearly Subscription

600

christianhistoricalsociety.in

Apply Now

Monthly Magazine for church history

Return Requested:

Tamil Printed Book- For Private Cirulation Only

To

**CHRISTAVA VARALATRU SUVADUGAL**
# 2.2.3(4)North Street,
Bungalow Surandai-627859.
Tenkasi District
Tamil Nadu
Ph: 04633 290401
Mo: **91767 80001**

Owned & Published By CHRISTIAN HISTORICAL SOCIETY, Tamil Eduction- For Private Cirulation Only
Editor|G.MUTHAIAH SELVAKUMAR| at 2.2.3(4)North Street, Bungalow Surandai-627859. Tenkasi District Ph: 04633 290401